விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 14 ஞாயிற்றுக்கிழமை (27.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# தென்னாபிரிக்காவின் முயற்சிகளை குழப்பும் செயற்பாட்டில் ஜனாதிபதி

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே இறுதியான அரசியல் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் நல்லிணக்க முயற்சிகளைக் குழப்பும் ஒரு செயற்பாடு என தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளை கடந்த வியாழக்கிழமை காலை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசுவதற்குப் பொருத்தமான இடம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுதான். எட்டப்படக்கூடிய எந்தத் தீர்வையும் சட்டரீதியாக நடை முறைப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குதான் உள்ளது. எனவே அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்துவதாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டும் எனத் தெரி வித்திருந்தார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதியின் கூற்றுத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா அனுசரணை வழங்க வேண்டும் என கொழும்பில் கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற பொது நலவாய உச்சி மாநாட்டில் கலந்து

23ஆம் பக்கம் பார்க்க....

## கடன் வாங்குவதில் இலங்கை முதலிடம்

(கொழும்பு)

உலக வங்கியினால் அனர்த்தங்களின் போது வழங்கப்படுகின்ற அவசர கடன் திட்டத்தை பெற்றுகொள்ளும் முதல் தெற்காசிய நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

ஆழிப்பேரலை, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக இந்த கடன்களை வழங்கும் திட்டத்தை உலக வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி இலங்கைக்கு 102 மில்லியன் டொலர்களை வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தம் ஏற்படும் போது வறிய மற்றும் நடுத்தர மக்களே அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் உடனடியாக அவர்களுக்கு உதவும் வகையில் இந்த கடன் நிதி வழங்கப்படுவதாக உலக வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## தனித் தமிழீழத்தை ஆதரிப்பார் ஜெயலலிதா

### புலம்பெயர் தமிழர்கள் பெரும் ஆதரவு



(கொழும்பு)

இலங்கை தமிழர்களின் சுய நிர்ணய உரிமைகளுக்கு, குரல் கொடுத்ததன் மூலம் அதிமுக பொதுச் செயலாளரும் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் பெரும் புகழை பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

ஜெயலலிதா இதுவரை கொண்டிருந்த தனது நிலைப்பாட்டை மாற்றி இலங்கை தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக குரல் கொடுத்துள்ளார்.

இலங்கை தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும் அதிமுகவின் வெற்றிக்காக இணையத்தள பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர்.

தேர்தலில் வெற்றி பெற்று

23ஆம் பக்கம் பார்க்க....

## நெடியவனின் பிடிவிறாந்து இன்டர்போல் இணையத்தில்

(கொழும்பு)

நெடியவன் என அழைக்கப்படும் பேரின்பநாயகம் சிவபரனுக்கு எதிரான சிகப்பு அறிக்கை பிடிவிறாந்து இன்டர் போலின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

நெடியவன் தற்போது நோர்வேயில் வசித்து வருவதாக கூறப்படுகிறது. இன்டர்போலின் பிடிவிறாந்து அதன் இணையத்தளத்தில் வெளியிடப்படும் வரை காத்திருப்பதாக நோர்வே அதிகாரிகள் இந்த வாரம் தெரிவித்திருந்தனர்.

இது குறித்து கருத்து வெளி

24ஆம் பக்கம் பார்க்க....

## பஸ் மோதி வயோதிபர் பலி

(யாழப்பாணம்)

இலங்கை போக்கு வரத்து சபைக்கு சொந்தமான பேருந்து துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவரை மோதித்தள்ளியதில்அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச்சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி அம்பாள் குளத்தைச்சேர்ந்த ஏழுமலை கதிரேசன் (வயது-73)என்ற வயோதிபரே சிகிச்சை பலனின்றி யாழ்.

23ஆம் பக்கம் பார்க்க....

## அகதிகளை அனுப்புவது குறித்து அவுஸ்திரேலியாவுடன் பேச்சு

### முதன் முதலாகச் சென்று திரும்பினார் கோத்தபாய

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரியுள்ள அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பில் அந்நாட்டு உயரதிகாரிகளுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழையும் அகதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட படை நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே, புகலிடம் கோரியுள்ள அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து கோத்தபாய ராஜபக்ஷவுடன் அந்நாட்டு உயரதிகாரிகள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

கன்பராவில் உள்ள ஹயாட் விடுதியில் கடந்த 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்கடத்தல் மற்றும் நாடுகடந்த குற்றங்கள் தொடர்பான அவுஸ்தி

23ஆம் பக்கம் பார்க்க....

## பாடசாலைகளுக்குச் சென்று படம் எடுக்கும் படையினர்!

### மன்னாரில் பதற்றம்

(மன்னார்)

மன்னார் மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட சில பாடசாலைகளுக்குச் சென்ற படையினர் அங்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் விபரங்களைச் சேகரித்துள்ளதுடன், அவர்களைப் புகைப்படங்கள் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இது நடைபெற்றிருப்பதனால், அந்தப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அச்சமடைந்துள்ளதாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், தமது மேலதிகாரிகளுக்கு முறையிட்டிருக்கின்றார்கள்.

வலயன்கட்டு காக்கையன்குளம் உள்ளிட்ட பாடசாலைகளிலும் இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாகத் தங்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டித்திருக்கின்றது.

இதுபற்றி கருத்து வெளியிட்ட

24ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
கோடைகாலத்தை குளிர்மையானதாக்க உலகத்தரம்வாய்ந்த
SHARP, WHIRLPOOL, HICTHI, TCL
எயார்கண்டிசனர்கள்
- 120 நாள் வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 5வருட உத்திரவாதம்
- பொருத்துதல் இலவசம்
- 3இலவச சேவைகள்
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-7183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

கிளிநொச்சி அக்கிரான் கோணாவில் இல: 66 - 67 வயல் மேட்டுக்காணிகள் மு.க.சுப்பிரமணியம் அவர்களினது. அவர்கள் காலஞ்சென்றமையால் அவரது இரு காணிகளும் அவரது வழித்தோன்றல் சு.முருகானந்தன், சு.நீதிநேசன் ஆகிய இருவருக்கும் உரித்தானது. எனது அதிகாரம் இன்றி எனது காணிக்குள் எவரும் உட்பிரவேசிக்க வேண்டாம் என்பதையும் இவ் அறிவித்தலை மீறி ஈடுபடுவோருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இத்தால் அனைவருக்கும் பகிரங்கப்படுத்துகிறேன்.

சு.நீதிநேசன், வில்லுமதவடி, நீர்வேலி.

# வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் புதிய நிரந்தர வேலைவாய்ப்பு ஜேம்/சொக்லெட்/பிஸ்கட்/காமெண்ட்/கோழி இறைச்சி/டயர்/புத்தகம் மற்றும் பல தயாரிப்புகளுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல் பிரிவுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. மற்றும் தனியார் பாதுகாப்பு, தனியார் துறைமுகப் பிரிவு, கட்டட நிர்மாணத்துறையிலும் வெற்றிடங்கள். சம்பளம் 18000/, 30000/+ வருகை தரும் அன்றே வேலைவாய்ப்பு. (நண்பர்கள்+ குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்)

தொடர்பு: 077-8430179

# உடனடி வேலைவாய்ப்பு

உங்கள் வாழ்க்கை என்றும் இனிமையாக இருக்க ஆசைப்படுகிறீர்களா? இன்றே அழையுங்கள். உடனடி நிரந்தர தொழில் வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ரொபி/பிஸ்கட்/P.V.C /Paint... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பக்கிங்/களஞ்சிப் பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்/பெண் உடனடியாக தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். முதல் மாதம் 19000/, 25000. 2வது மாதம் 28000/, 32000+ வரை சம்பளம் பெறலாம். (நண்பர்கள்+ குழுக்கள் ஒரே இடத்தில்) வருகை அன்றே வேலைவாய்ப்பு. விசேடம்: கல்வித் தகைமை, மொழி அவசியமில்லை. (சி-7184)

தொடர்புக்கு: வைதேகி 077-6838231

# தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடங்கள். இன்றே இணையலாம். மேசன்/தச்சு/பெயின்டர்/செட்டலிங்பாஸ்/கம்பிபாஸ்/இலக்டீசன்/டயில்பாஸ் (1200/, 1500) கையுதவியாளர் (900/, 1100) உணவு + தங்குமிடம் வழங்கப்படும். வருகை அன்றே வேலைவாய்ப்பு.

தொடர்பு-077 5561883/ 077-6838231

# நிரந்தர தொழில்

வேலையில்லாப் பிரச்சினையா??? தீர்க்க ஒரேவழி எம்முடன் கைகோருங்கள். (கல்வி, அனுபவம், மொழி அவசியமில்லை) துறைமுகம் (தனியார்) கப்பல் புனர்நிர்மாணப் பிரிவில் சாதாரண ஊழியர்கள் தச்சு, வெல்டர், விமான நிலையத்தில் தனியார் சுத்திகரிப்பாளர், லொன்றி கார்போட் மற்றும் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் JSO,LSO,SSO 18-50 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். சம்பளம் முதல் மாதம் 17000/ 25000/ 2-ம் 3-ம் மாதம் 35000/+ மேல். வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு.

தொடர்புக்கு: தர்மிகா 077- 5561883
வைதேகி 077-6838231 (சி-7185)

# கண்ணீர் அஞ்சலி



## லீலாவதி சிவராஜா

திருவாளர்கள் சி.சிவமோகன் (V.K.இராஜரட்ணம்), சி.சிவசீலன் (கனடா) சி.சிவஜீபன் (விஷ்ரா விஷன்) ஆகியோரின் பாசமிகு தாயார் திருமதி லீலாவதி சிவராஜா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(6227)
இ.குவேந்திரநாதன் (இராசா)
குடும்பத்தினர்.

# வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் Temple Road (கோவில் வீதி ஒரு பரப்பு காணியுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (6209)

தொடர்புகட்கு :-0777040378

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள் - அன்பளிப்பு பொருட்கள் - உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
WESTERN UNION MONEY TRANSFER
(C-7182)

# அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு 07 . 11 . 1956
இறப்பு 29 . 03 . 2014



கடந்த 29.03.2014 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையாரான

அமரர்

## சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.04.2014) ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மறுநாள் 28.04.2014 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

செம்பியன்பற்று தெற்கு,
செம்பியன்பற்று.
(சி-7194)
இங்ஙனம்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லக்கண்டு பொன்னையா (குஞ்சி)

யாழ்ப்பாணம், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கையை சொந்த இடமாகவும் தற்போது 27/11, 5 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்டு பொன்னையா கடந்த (24. 04.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை (பிரபல வர்த்தகர்) - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் (பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி அம்மாள், செல்லத்துரை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சண்முகராஜா (உரிமையாளர் டைமன் தேயிலை கம்பனி), பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர்) மற்றும் மங்களேஸ்வரி (கனடா), கமலநாதன் (Toby's News Food and wine London), விமலநாதன் (லண்டன்), கமலேஸ்வரி (செந்தி-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் வடிவாம்பிகை (ஓய்வுபெற்ற ASR தொலைத் தொடர்புத் திணைக்களம்), ஜெயதீஸ்வரி (பவளம்- ஓய்வுபெற்ற ஆசிரியை), Dr.M.கனகசபை (கனடா), பிறையதாம்பாள் (லண்டன்), வத்சல்யா (லண்டன்), பவானந்தன் (Thurrock Mini Market London) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெகதீசன் - சக்தி (நோர்வே), ஜெயகாந்தன் (பிரான்ஸ்), உஷாந்தி (B.A. முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), சுதன் (ஸ்ரீசுதனா நகை மாளிகை), கௌரி - கணேசமூர்த்தி (கனடா), Dr.M.K. சிவகுமார் (M.B.B.S Canada), தாரணி (Diploma Accounting- Canada), Dr.பிரசாந்தி (M.B.B.S., B.Sc. (Hons) London), வசீகரன் (ERP Consultant - B.Sc. (Hons) London) , பிரஷன்னா (AR Financial Officer - Bussiness and Financial Management B.A. (Hons) London) , அட்ஷரா (லண்டன்), நிரூஜன் (Bio Medical Sciences M.Sc. Bio Chemistry, B.Sc. (Hones) London), பானுஷா (Bio Medical:Sciences B.Sc.ááá London) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சண்முகப்பிரியா (நோர்வே), கென்சூ (பிரான்ஸ்), எலீனா (பிரான்ஸ்), அபிராமி (யாழ்ப்பாணம்), ரேனிஷா (கனடா), பவித்திரா (கனடா), காவ்யா (கனடா), ரூபியா (கனடா) ஆகியோரின் பாசமிகுபூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2014) 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 27/11, 5 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0776935610
(6247)

தகவல்:
சுந்தரலிங்கம் (சுதன்)
(பேரன் - ஸ்ரீசுதனா
நகைமாளிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வன்முறைகளுக்கு எதிராக இங்கு கடுமையான கொள்கைகள்



## குற்றச்சாட்டை மறுக்கிறது இலங்கை

(கொழும்பு)

**இலங்கையின் போரின் போதும் பின்னரும் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள் தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் இலங் கைக் கான பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா மறுத்துள்ளார்.**

பெண்கள் மற்றும் சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்ற விடயம் தொடர்பில் நியூயோர்க்கில் இடம் பெற்ற கருத்தரங்கில் அவர் இந்த மறுப்பை வெளியிட்டார்.

இலங்கையில் போரின் போதும் பின்னரும் இடம்பெற்ற பெண்கள் மதான பாலியல் வன்முறைகள் தொடர்பில் படையினர் மீது குறைந்தளவான குற்றச்சாட்டுக்களே சுமத்தப்பட்டுள்ளன.

சமாதானம், பாதுகாப்பு இன்மையும் போரின் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தமையும் பாலியல் வன்முறைகளுக்கு காரணமாக அமைந்திருந்தன.

எனினும் இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில் பாலியல் வன்முறைகளுக்கு எதிராக கடுமையான கொள்கைகளை நடை முறைப் படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2007 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகளில் 7 படைவர்களே தொடர்பு கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இதில் 5 சம்பவங்கள் வடக்கில் இடம்பெற்றவையாகும். எனினும் வடக்கையும் சேர்த்து இலங்கையில் குறித்த காலப்பகுதியில் 119 பாலியல் வன்முறைகள் இடம்பெற்றிருந்தன.

2009 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு காலத்தில் இலங்கையில் 256 பாலியல் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றன. எனினும் வடக்கில் இடம்பெற்ற 6 சம்பவங்களில் மாத்திரமே இலங்கை படையினர் தொடர்பு கொண்டிருந்தனர்.

அதாவது இது மொத்த பாலியல் வன்முறையில் 3.3 வீதமாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இலங்கைக்கு எதிராக இந்த விடயத்தில் தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, பாலியல் வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படுகின்ற போதும் உறுப்பு நாடுகளின் இறைமையை ஐக்கிய நாடுகள் சபை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

இந்த வாரத்தில் ஐக்கிய நாடுகளின் பெண்கள் மீதான பாலியல் வன்முறை தொடர்பான ஆய்வுகளில் 21 நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் இலங்கையும் உள்ளடங்குகிறது.

அத்துடன் இலங்கையில் தமிழ் பெண்கள் மீது போரின் போதும் போரின் பின்னரும் மேற்கொள்ளப் பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பில் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹனவிடம் தாம் பேச்சு நடத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் பெண்கள் மீதான பாலியல் வன்முறை தொடர்பான பிரதிநிதி பங்குரா நியூயோர்க்கில் வைத்து தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# மாநகர சபையின் பொதுக்கூட்டம்

யாழ். மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் என யாழ். மாநகர சபை செயலாளர் சி.தா. தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (2)

# சந்தேக நபர்கள் மூவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி பிரதேசத்தில் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் யாழ்.விசேட குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இச் சந்தேக நபர்களை யாழ்.குற்றப் புலனாய்வு பொலிஸ் பிரிவும் நெல்லியடி பொலிஸாரும் இணைந்து கடந்த 23 ஆம் திகதி இரவு கரவெட்டி, துன்னாலை ஆகிய இடங்களிலிருந்தும் மறுநாள் காலை நெல்லியடி பகுதியிலிருந்தும் கைது செய்துள்ளனர்.

இந்நபர்கள் தொடர்ச்சியான திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் இவர்களுடன் தொடர்புபட்ட பலர் ஒளிந்துள்ளனர் என்றும் நீதி மன்ற விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களை யாழ். குற்றப் புலனாய்வுப் பொலிஸ் பிரிவினர் தேடி வருகின்றனர். (2-60)

# சர்வதேச அரங்கில் இலங்கைக்கு மாலைதீவு முழு ஆதரவு வழங்கும்

## மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் உறுதிமொழி

(கொழும்பு)

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு மாலைதீவு முழுமையான ஆதரவை வழங்குமென மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் துன்யா மாமூன் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்று காலை சந்தித்த மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் துன்யா மாமூன் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இந்த சந்திப்பின் போது கல்வி, இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது உட்பட இரு நாடுகளின் நலன் சார்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இரண்டாவது முறையாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன் இலங்கை வந்திருந்த போது அவருடன் துன்யா மாமூனும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் பொதுநலவாய தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி இலங்கை வந்துள்ளார். (2)

# கசினோ தெளிவில்லையெனில் இலங்கையில் முதலீடு செய்யமாட்டோம்

## கசினோ வர்த்தகர் மிரட்டல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிறைவேறறப்பட்ட செயல் நுணுக்க அபிவிருத்தித் திட்ட சட்டமூலத்தில் கசினோ சூதாட்டம் ஏற்படுத்தப்படும் என்று தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும் என அவுஸ்திரேலியாவின் கசினோ வர்த்தகரான ஜேம்ஸ் பாக்கர் கூறியுள்ளார்.

கசினோ சூதாட்டம் ஏற்படுத்தப் படும் என தெளிவாக அறிவிக்காவிட்டால், இலங்கையில் 5 நட்சத்திர ஹோட்டல் தொகுதியை நிர்மாணிக்கும் தீர்மானத்தை கைவிடப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

ஜேம்ஸ் பாக்கர், இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுடன் கடந்த செப்டெம்பர் மாதம் 400 மில்லியன் டொலருக்கு அதிகமான பாரிய முதலீடுகளை செய்தற்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளார்.

ஆடம்பர ஹோட்டல் தொகுதியில் கசினோ சூதாட்ட நிலையங்களையும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்துடன் அண்மையில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 25 ஆம் திகதி நிறைவேறறப்பட்ட சட்டமூலத்தில் கசினோ பற்றி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தில் அரசாங்கத்துடன் தனது பிரதிநிதி ஊடாக தொடர்பு கொண்டு, கசினோ என்று சரியாக குறிப்பிடாது போனால தான் இலங்கையில் முதலீடு செய்ய போவதில்லை என அறிவித்துள்ளார். (2)

# இலங்கைக்கு சிப்பிகளை கடத்த முயன்ற நபர் கைது

இந்தியாவின் சென்னையிலிருந்து இலங்கைக்கு சிப்பிகளை கடத்த முயன்ற நபர் கைது செய்யப்பட்டார்.

சென்னை விமான நிலையத்தில், நேற்று முன்தினம் விமான பயணிகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

உடைமைகளை சோதனை செய்த போது நபர் ஒருவர் கொண்டு சென்ற பயணப் பொதியில் கடல் சிப்பி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. 10 கிலோ எடையுள்ள கடல் சிப்பிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

கடல்வாழ் உயிரினங்கள் எடுத்து செல்வது மத்திய அரசால் தடை செய்யப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட கடல் சிப்பியின் மதிப்பு 2 இலட்சம் ருபாவாகும். (2)

# இன்றைய இராசி பலன்

27.04.2014

(சித்திரை 14, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 2.17 மணிவரை

உத்தரட்டாதி முற்பகல் 10.12 மணிவரை

இராகுகாலம் -4.29-5.59 மணிவரை

சுபநேரம் - 8.59-10.29 மணிவரை

வளவன்

**மீனம்** — கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், திட்டமிட்ட காரியமொன்றில் சில திருப்பங்கள் ஏற்படலாம்.

**மேடம்** — வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை,உணர்ச்சி வசப்படும் சூழ்நிலைகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்** — செல்வாக்கு மேலோங்கும் நாள், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** — மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், ஆரோக்கியமான நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நண்பர்களும் உறவினர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கும்பம்** — கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், சில விவாதங்கள் ஏற்படலாம், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மகரம்** — பிற இனத்தவரால் வருமானம் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**சிம்மம்** — எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரம்மங்களை எதிர்நோக்க வேண்டி வரலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பொன்று பகையாகலாம்.

**தனுசு** — தாராளமாக செலவுகள் செய்வீர்கள், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**விருச்சிகம்** — பணத் தேவைகள் பூர்த்தியாகும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**துலாம்** — சுவாரஸ்யமான நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், முயற்சிகள் கைகூடும், சுப செய்திகளால் மனமகிழ்ச்சி ஏற்படும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**கன்னி** — சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, கௌரவமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் யுவதிகளுக்கு இலவச தொழில் பயிற்சிகள்

(மானிப்பாய்)


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் யாழ். மாவட்ட காரியாலயத்தின் ஏற்பாட் டில் இளைஞர் யுவதிகளுக்கு இலவச தொழில் பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.


இத்தொழில் பயிற்சிகள் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய இளைஞர் சேவை மன்றத்தி னால் அனுசரணை வழங்கப்படவுள்ளது.

இத்தொழில் பயிற்சிகளானது எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கமைய தையல், மணப்பெண் அலங்காரம், கணனி மென்பொருள், கணனி வன்பொருள் உள்ளிட்ட பயிற்சிகளே முன்னெடுக்கப்படவுள்ளன. இப்பயிற்சிகளில் 16 வயது தொடக்கம் 29 வயது வரையுள்ள இளைஞர் யுவதிகள் கலந்து கொள்ளமுடியும்.


மேற்படி பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை உதவி இயக்குனர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இல28, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் கேட்டுள்ளனர். (2-23)



தமிழ் தேசியத் தலைவர் தந்தை செல்வாவின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நேற்று காலை 9 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதனையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பொது செயலாளருமான மாவை சேனாதிராஜா உட்பட பலர் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்துவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களினையும் படங்களில் காணலாம்.

# மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

நல்லூர் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் உதவி திட்டத்தின் கீழ் மாணவர்களின் நலன் கருதி உதவிகள் வழங்கும் நிகழ்வொன்று இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நல்லூர் சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதற்கமைய யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு நூலக புனரமைப்பிற்காக சுமார் ஐந்து இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் யாழ்.மாவட்டத்தின் முப்பது பாடசாலை மாணவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பாதணிகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்விற்கு ஒஸ்மானியா கல்லூரி மற்றும் நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-23)


## சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல் வாதம், சிறுநீர் அலற்சி, சூதக வலி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்த அழுத்தம், நெஞ்சுக்குத்து, நரம்புத்தளர்ச்சி, உடல் மெலிவு, பருமன், சோறியாசிஸ், கிரந்தி, கரப்பன், குளோக்கோமா, இளநரை, பொடுகு, கண் சம்பந்தப்பட்ட நோயாளர்களை பார்வை இடுவதற்காக பேரறிஞர், சிறப்பு ஆலோசகர் டாக்டர் K. பாலசுப்பிரமணியம் அவர்களை 1, 2, 3, 4 ஆகிய திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொடர்புகளுக்கு:-
0777047371, 075730195, 0771005971

Dr.K. சிவானந்தன்
ஆனந்தா வைத்திய நிலையம்
காவல்துறை அருகாமை
ஸ்ரேசன் றோட், சுன்னாகம். (6242)

## VACANCIES

A reputed finance company has vacancies at their Jaffna office for the following posts (Males only)
1) Marketing executives
2) Recovery officers (C-7190)

Those who have passed G.C.E (A/L) G.C.E (O/L) are eligible.

CONTACT No:-0777684498

## எமது நிறுவனத்தின் மூலம் வெற்றி பெற்ற விசாக்களையும், எம்மால் வெற்றியடைய முடியாத விசாக்களையும் நேரில் ஆய்வு செய்து சீர்தூக்கிப் பார்த்தபின் எம்முடன் இணைந்து கொள்ளலாம்

* ஆஸ்திரேலிய குடும்ப விசா (இதில் வடபுலத்தில் நாமே தனித்துவமானவர்கள்).
* நியூசிலாந்தில் படிக்க பகுதி நேரமாக கைநிறைய உழைக்க IELTS தேவையில்லை.
  2 வருடத்தில் PR பெற்றால் ஆஸி பறக்கலாம்.
* இத்தாலி, நோர்வே, ஜேர்மனி, சுவிஸ் இரண்டு வாரத்தில் நாட்டை விட்டு சட்ட ரீதியாகப் பறக்கலாம்.
* கனடாவில் மருந்தாளர், மின்னிணைப்பாளர், தாதியர், தச்சுத் தொழில் புரிவோர், பிளம்பர், வெல்டேர்ஸ், வைத்தியர்கள் மேலதிக பயிற்சி நெறிக்காக செல்வதற்கு IELTS தேவையில்லை. வெறும் 24 இலட்சம் போதும்.
* ஆண்கள், பெண்கள் ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க மாதம் ஒரு இலட்சம் வரை உழைக்க வெறும் 5 இலட்சம் போதும் (4வருட விசா) 50 வயது வரை.
* மலேசியாவில் (விசிற் விசாவில் அல்ல) படிக்கும் அல்லது உழைக்கும் விசாவில் செல்ல வெறும் 5 இலட்சங்கள் போதுமானது.
* மொறீசியஸ் நாட்டில் படிக்க, உழைக்க 6 இலட்சங்கள் மட்டும் தேவை.

**விசா வெற்றி பெறுவது என்பது அந்தந்த நாடுகளின் விசா அலுவலரின் ஆதிக்க வரம்பினுள் அமையும் விடயமாகும். இதனால் எவ்விதத்திலும் விசா வெற்றி தொடர்பான உத்தரவாதம் எம்மால் தரமுடியாதுள்ளது.**

ஏழு நாட்களும் உங்கள் வருகைக்காக காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை நாம் காத்திருப்போம்.

பல வெற்றிகளைக்கண்ட அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சமூக மயப்படுத்தப்பட்ட திசைகாட்டியிடம் நீங்கள் நிதானமாகவே வாருங்கள்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்** PV82703
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9016, 021 499 3502



(C-7195)

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



veta
Experts in English Training

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட

**Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 8.30 a.m. | Mon, Fri 3.30 p.m. | Mon, Wed, 9.30 a.m. | Sat, Sun 8.00 a.m. |
| Tue, Thu 9.30 a.m. | Tue,Thu 8.30 a.m. | Sat, sun, 2.30 p.m. | Tue,Thu 3.00 p.m. |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

DMI COMPUTER EDUCATION

A1-Exam B1-Exam திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது.

City & Guilds Approved Centre

IELTS • Unique Test Tips • Latest course Materials (C-7196)

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | No 150, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

## வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை அரசியல் தீர்வுக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு தேவை

## முன்மொழிவுகளை சமர்ப்பித்தார் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை அமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் பேரவை செயலாளர் சீ.வீ.கே. சிவஞானத்திற்கு ஆறு பிரேரணை முன்மொழிவுகளை வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் அனுப்பி வைத்துள்ளார். அவர் அனுப்பி வைத்துள்ள பிரேரணை முன்மொழிவுகள் வருமாறு,

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி தேவை- ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் சர்வதேச விசாரணை தேவையென வலியுறுத்திய அதன் உயர்ஸ்தானிகருக்கும் விசாரணையை வலியுறுத்தித் தீர்மானம் கொண்டு வந்த நாடுகளுக்கும் நன்றி தெரிவித்தல்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சர்வதேச விசாரணை தீர்மானத்திற்கு ஆதரவு அளித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்தல்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும், ஏனைய உலக நாடுகளுக்கும் இலங்கையில் இடம் பெற்ற மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமான சுதந்திர சர்வதேச விசாரணைக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

இலங்கையின் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புத் தேவை- இடைக்கால அரசு நிறுவுதல்

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தரப்புக்கும் இடையில்பேச்சுக்களில் மத்தியஸ்தம் வகிக்க முன்வருமாறு அமெரிக்கா,ஐக்கிய இராச்சியம், இந்தியா உள்ளிட்ட ஏனைய சில நாடுகளும் இணைந்த இணைத்தலைமை நாடுகள் குழுவிற்கு அழைப்புவிடுத்தல்.

புலம்பெயர் நாடுகளில் இயங்கும் தமிழ் அமைப்புக்களையும், தனி நபர்களையும் தடை செய்தமை இலங்கை அரசின் ஜனநாயக விரோதச் செயல்- தமிழ் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முன்வருமாறு இலங்கை அரசுக்கு அழைப்பு விடுத்தல் போன்ற 6 முன்மொழிகளை அவர் சமர்ப்பித்துள்ளார். (2)

# கசினோவுக்கு எதிராக வாக்களிப்பதற்கு முஸ்லிம் காங்கிரசிற்கு முதுகெலும்பில்லை

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கசினோ சூதாட்ட சட்டத்தின் மூலம் மீதான வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகி அதனை எதிர்த்து வாக்களிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதுகெலும்பு இல்லாது போய்விட்டது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்று முன்தின அமர்வின் போது இடம்பெற்ற செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழான கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமந்திரன்எம்.பி இங்கு மேலும் கூறுகையில்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி கட்டளையான கசினோ சூதாட்டத்தை கொண்டதான நிகழ்ச்சி நிரல் இல்லை என்று இங்கு அமைச்சர்களால் கூறப்படுகின்றது.

எனினும் மாநாயக்க தேரர்களே இவ்விடயத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை திருத்தியமைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். ஆகவே தான் மனச்சாட்சி உள்ள ஆளும் கட்சி உறுப்பினர் சூதாட்டத்தைக் கொண்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் நின்று விடாது ஆளும் கட்சியின் பங்காளியான அத்துரலியே ரத்ன தேரர் எதிர்த்து வாக்களித்தார்.

இந்நாட்டில் கடைப்பிடிக்கப்படுகின்ற நான்கு மதங்களுமே சூதாட்டத்தை வெறுக்கின்றன.

சூதாட்டத்தின் மூலம் மனை வியை இழந்தமை, சொத்துக்களை இழந்தமை, சகோதரங்களுக்கிடையே கொலைகள் இடம்பெற்றமை என்பவற்றை வரலாறுகள் கூறுகின்றன. (2)

# பொதுக்கூட்டமும் மேதினக்கூட்டமும்

(மட்டக்களப்பு)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கமும் மற்றும் இணைநிறுவனம் வடக்குக் கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம் ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் மே தினக் கூட்டமும் மற்றும் 17 ஆவது வருடாந்த வா.கி.மா.ஜீவோதய நலன்புரி நிறுவனத்தின் கூட்டமும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு கல்முனை வை.எம்.சி.ஏ. இற்கு அருகாமையிலுள்ள மெதடிஸ்த மண்டபத்தில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறும். (2)

# கசினோ சூதாட்டம் குறித்த இரு வர்த்தமானி அறிவித்தல்கள் பாராளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

கசினோ சூதாட்டம் குறித்த இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் பாராளுமன்றில் நிறைவேற்ற ப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி எதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தந்திரோபாய அபிவிருத்தி சட்டம என்ற பெயரில் மூன்று வர்த்தமானி அறிவித்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் அறிவிப்பும் மேலும் இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களும் பாராளுமன்ற வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இரண்டாம் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆதரவாக 112 வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. இதன்படி 68 வாக்குகளினால் வர்த்தமானி அறிவித்தல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்றாம் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆதரவாக 109 வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. இதன்படி 65 வாக்குகளினால் இந்த வர்த்தமானி அறிவித்தலும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகவே வாக்களித்திருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (2)

# இலங்கையை நேரில் சென்று பார்வையிட்டால் உண்மை புரியும்

## உயர்ஸ்தானிகர் நோனீஸ் தெரிவிப்பு

அரசாங்கம் மக்களை பயங்கரவாதத்திலிருந்து விடுவித்துள்ளதாக பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் டாக்டர் கிறிஸ் நோனீஸ் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய இளைஞர் மற்றும் மனித வுரிமை மாநாட்டில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் மூலம் அனைத்து மக்களும் நன்மை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவை கடுமையாக விமர்சனம் செய்தவர்களே இன்று அவரை புகழ்ந்து பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை உலகம் வெகு விரைவில் புரிந்து கொள்ளும் எனவும் அதன் போது அவர்கள் விமர்சனங்கள் செய்ததற்காக வருந்துவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை விமர்சனம் செய்யும் தரப்பினர் நாட்டிற்கு ஒரு தடவை விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டால், உண்மையை புரிந்து கொள்வார்கள் என அவர் தெரிவித்துள்ளார். மனிதவுரிமைகள் மனதுக்குள்ளிருந்து உருவாகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 32 உயரம்: 6'2"
தகைமை/தொழில்: BSc, MSc – Following / Designer (சிங்கப்பூர்)
தொ.இ: B/3024

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 21 ½ சூரி செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: College of Education, NCE – Following / தனியார் வேலை (இத்தாலி)
தொ.இ: B/3025

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 36 ¾ உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L (சுவிஸ்)
தொ.இ: B/3028

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 65 ¼ செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: ஆராய்ச்சி மாணவன், PHD - Following
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/3029

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 15 ¾ உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L / சுகாதாரப்பணி உதவியாளர்
தொ.இ: G/3030

பிறப்பு: 1983 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 19 சூரி செவ் 12 இல்
உயரம்: 153cm
தகைமை/தொழில்: O/L / தையல் (கொலண்ட் PR)
தொ.இ: G/3036

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 29 சூரி செவ் 11 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BBA / தனியார் வேலை (UK – Work Permit)
தொ.இ: G/3037

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 19 செவ் 4 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc - Molecular Biology
தொ.இ: G/3038

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவை - 47 நிகழ்வு

அவை - 47 நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய், கலையகத்தில் தெணியான் தலைமையில் இரு நிகழ்வாக நடைபெறவுள்ளது.

இதற்கமைய முதலாவது நிகழ்வாக யாழ்ப்பாணத்தில் வணிக முன்னெடுப்பும் நவீன விளம்பர இலக்கியமும் எனும் பொருளில் திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட் குழுமத்தின் சிரேஷ்ட உறுப்பினர் சி.சுபசீலனின் கருத்துப் பகிர்வு இடம்பெறும்.

தொடர்ந்து இரண்டாம் நிகழ்வாக இ.சு.முரளிதரனின் கடவுளின் கைபேசி எண் சிறுகதை நூல வெளியீடும் இடம்பெறவுள்ளது.

இதில் வரவேற்புரையை ஆசிரியர் க.தர்மதேவன் ஆற்ற நூல் வெளியீட்டுரை கவிஞர் த.ஜெயசீலன் ஆற்றுவார்.

மதிப்பீட்டுரையை எழுத்தாளர் த.அஜந்தகுமார் நிகழ்த்துவார். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் விஷக்கடி சிகிச்சைப் பிரிவு இல்லை

## மக்கள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் விஷக்கடிக்குரிய சிகிச்சை இன்மையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நெடுந்தீவு பகுதியிலேயே அதிகளவிலான விஷக்கடி சம்பவங்கள் இடம்பெறுகின்ற போதும் குறித்த இடத்தில் விஷக்கடிக்கான சிகிச்சையளிப்பதற்கு உரிய வசதிகள் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையில் மலசலகூடம் தகுந்த முறையில் இல்லையெனவும் வைத்தியசாலையில் வைத்தியர்கள் தங்கிநின்று பணிபுரிகின்ற போதிலும் அவர்களுக்கு உரிய தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்து வசதி என்பன இன்மையால் வைத்தியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

வைத்தியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற போதிலும் அவர்களுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால் அவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வடக்குமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் 99 வைத்தியசாலைகள் மாகாண சபையின் கீழுள்ளது.

இவை அனைத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பு மாகாண சபைக்கே உள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கு என சிறந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளார். அவரின் ஊடாக இவ் வாறான சேவைகளை முன்னெடுக்க முடியும்.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு என தற்போது நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் இங்குள்ள பிரச்சினைகளை நன்றாக அறிந்து வைத்துள்ளார்.

அவர் ஒரு பெண்ணாக உள்ள போதிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் இங்கு தங்கியிருந்து சேவையாற்றுவது பாராட்டத்தக்கதாகும்.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு என 30 மில்லியன் ரூபா செலவில் கட்டடம் ஒன்று மிக விரைவில் கட்டப்படவுள்ளது.

இங்கு விஷக்கடி பெரும் பிரச்சினையாக உள்ள போதிலும் இவ் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கூடம் இன்மையால் விஷக்கடிக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலையுள்ளது.

அவசர சிகிச்சைக்கூடம் இல்லாத போது விஷக்கடிக்கான முதலுதவியளிப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உயிரிழப்பினைக்கூட ஏற்படுத்தி விடலாம்.

ஆகையினால் விஷக்கடியுற்றோரினை அம்புலன்ஸ் மூலம் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்புவதே தற்போது சிறந்த வழியாகும் என்றார் அவர்.

இதேவேளை நெடுந்தீவில் விஷக்கடி சிகிச்சை இன்மையால் பலர் உயிரிழந்துள்ளதாகவும் அப் பகுதியினர் தெரிவிக்கின்றமையோடு விஷக்கடிக்கான சிகிச்சையை நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் இது விடயத்தில் புலம்பெயர் மக்கள் தமது பிரதேச அபிவிருத்தியில் அக்கறை கொள்ள வேண்டுமென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார். (2-4)

# கல்வி செலவுகளை அரசு குறைத்துள்ளது

## சஜித் எம்.பி.சுட்டிக்காட்டு

கல்விக்கான செலவுகளை அரசாங்கம் பாரியளவில் குறைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டத்தில் 75 வீதமான மாணவர்களுக்கு மதிய உணவு நிறுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக ஐநூறு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இவ்வாறான ஓர் நிலையில் மூன்று ஹோட்டல்களை அமைத்து அதற்கு வரிச் சலுகை வழங்குவது நியாயமாகுமா?இந்த வரிச் சலுகை மூலம் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்குமா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (2)

## ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை, ஜனாதிபதி செயலக புகையிரத நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றது.

புகையிரதத்தில் பயணம் செய்வதற்காக வந்த நபர் பாணந்துறை நோக்கி சென்ற புகையிரதத்தில் மோதுண்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இதில் மட்டக்குளி பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)

# நாட்டை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டு முதலீடு அவசியம்

## கல்வி அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

வறிய மக்களை சூதாட்டத்திலிருந்து பாதுகாப்பது இந்த அரசாங்கமே என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தந்திரோபாய அபிவிருத்தி சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் பங்கேற்ற போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாநாயக்கர்களின் கோரிக்கைக்கு அமைய கசினோ சூதாட்ட சட்டம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

கசினோ, ஜாக்பொட், சுரண்டும் லொத்தர் சீட்டு போன்ற அனைத்தையுமே ஐக்கிய தேசியக் கட்சியே அறிமுகம் செய்திருந்தது. அன்று மக்கள் வெறும் கையுடனேயே வீடு திரும்பியிருந்தனர். சூதாட்டங்களின் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை வரையறுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நடவடிக்கை எடுத்தார். இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டு முதலீடு அவசியமானது என்றார்.

இதேவேளை, அரசாங்கம் என்ன சொன்னாலும் கசினோ சூதாட்டம் முன்னெடுக்கப்படும் என அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தந்திரோபாய சட்டத்தின் மூன்று வர்த்தமானி அறிவித்தல்களிலும் கசினோ சூதாட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஓர் வழியில் கசினோ சூதாட்டத்திற்கு அரசாங்கம் வழியமைத்துக் கொடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம்; நபருக்கு 7 வருட கடூழிய சிறை

(கொழும்பு)

பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட 34 வயதான நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

குறித்த நபருக்கு 7 ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐயாயிரம் ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீட்டையும் வழங்குமாறும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அபராத தொகையை செலுத்த தவறினால் மூன்று மாதங்களும், இழப்பீட்டு தொகை செலுத்த தவறினால் மேலும் 6 மாதங்களும் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி தனது உத்தரவில் கூறியுள்ளார்.

குற்றம் நிரூபிக்கப்பட்ட நபருக்கு சொந்தமான கிரிபத்கொட, கொங்காவத்தை பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய இந்த பெண் 2004 ஆம் ஆண்டு இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (2)

## மே தினப் பேரணியும் பொதுக் கூட்டமும்

புதிய ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சியின் மே தினப் பேரணியும் பொதுக் கூட்டமும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் இக் கட்சியின் வட பிரதேசச் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மே தினப் பேரணி பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி சந்தியிலிருந்து ஆரம்பமாகி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நிறைவடையும்.

அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் மாலை 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென இக் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் அறிவித்துள்ளார். (2)

# சோதனைச்சாவடிகளை அகற்றியமையால் வங்கிக்கொள்ளைகள் அதிகரிப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டமையே வங்கிக் கொள்ளைகள் உயர்வடைவதற்கான காரணம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக வங்கிக் கொள்ளைகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. குறிப்பாக கொழும்பில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டமையே வங்கிக் கொள்ளைகள் இடம்பெறுவதற்கான பிரதான ஏதுவெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மிக அருகாமையில் இராணுவ மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகள் காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

கொள்ளைச் சம்பவங்களை தடுக்க பொலிஸார் விசேட திட்டங்களை வகுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 | 80 |
| தக்காளி | 30 | 40 | 30 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 40 |
| கரட் | 90 | 80 | 80 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 50 | 40 |
| வாழைக்காய் | 20 | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 60-80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80-90 | 100 |
| பாகற்காய் | 120 | 140 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | - | 50 |
| பயற்றங்காய் | 40 | 40 | 50 | 40 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 30-60 | 80 | 60 | 80 |
| போஞ்சி | - | 160 | - | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | - | - |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 70-90 | 120 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 100 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்து மோசடியில் ஈடுபடும் கிராமமட்ட அமைப்புக்கள் மீது சட்ட நடவடிக்கை

## வடக்கு அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள கிராம மட்ட அமைப்புக்கள் சொத்துக்களை மோசடி செய்கின்ற நடவடிக்கை தற்போது அதிகரித்து வருவதாக குற்றம்சாட்டப்புட்டுள்ளது.

இதேவேளை, மோசடிகளில் ஈடுபடும் அமைப்புக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் முதுகெலும்பாக செயற்படுவது கிராம மட்டங்களில் செயற்படும் அமைப்புக்கள். அந்த கிராம மட்ட அமைப்புக்களில் பெரும் பங்காற்றி வருவது கிராம அபிவிருத்தி சங்கங்களும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுமாகும்.

இந்த இரண்டும் தமது கடமை களை பொறுப்புடன் செயற்படுத்தும் போது ஒரு கிராமத்தின் அபிவி ருத்தியை இலகுவாக்க முடியும். அந்த வகையில் தற்போது வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உட்பட்ட சகல சங்கங்களும் தங்களது நியதிச் சட் டங்களுக்கேற்ப செயற்பட வேண்டும்.

வடமாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு உட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இருப்பினும் பல கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களி னதும் நிதிகளில் பல மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சில சங்கங்களின் தலைவர்கள் நிதிகளை தாமே கையிருப்பில் வைத்திருப்பதாகவும் அந்த நிதிகளை முறையாகப் பயன்படுத்தாது தவறான வழிகளில் பயன்படுத்துவதாகவும் நிர்வாக சபை கூட்ட ங்களையோ பொதுக்கூட்டங்க ளையோ நடத்தாது கணக்குகளை சீர் செய்யாது அராஜகம் செய்வதாகவும் மக்கள் முறையிட்டுள்ள னர்.

அத்துடன் மாதர் அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்ட சுழற்சிக் கடன்களின் அறவுகளை உரிய அதிகாரிகளிடம் வழங்காது தாமே வைத்திருந்து வட்டிக்குக் கொடுப்பதும் பல முறைகேடுகளை மேற்கொள்வதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகா ரிகள் உடன்விசாரணைகளை நடத்தி கணக்குகளை சீர் செய்யத் தவறும் பட்சத்தில் உரிய அதிகாரிகள் மீதும்கடும் நடவடிக்கை மேற் கொள்வதுடன் சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகம் மீது உடனடியாக சட்ட நடவடிக்கைகளும மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மிகவும் வறுமைக்குட்பட்டு தங்க ளது பிள்ளைகளை பராமரிக்க முடியாது போராடும்மக்கள் ஒரு புறம் இருக்க பதவிகளையும் செல் வாக்கு களையும் வைத்துக் கொண்டு பல கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர கிராம அபிவிருத்தி சங்க நிரவாகிகள தான்தோன்றித்தனமாக நடப்பது மிகவும் வேதனை அளிக்கின்றது.

இவ்வாறான கிராமங்களை சேர்ந்த மக்கள் உங்கள் கிராம அபி விருத்தி சங்க நிர்வாகங்களை தேர்ந் தெடுக்கும் போது இன, மத, சாதி பேத மில்லாமல் அரசியல் செல்வாக்குகளுக்கு உட்படாது செயற்படுபவர்' களை தேர்ந்தெடுக்க வேண்டும். அத்துடன் கிராம அபிவிருத்திச் சங்க விதிகளை மீறி செயற் படுபவர்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு உடன் தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போது பல கிராமங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் எழுந் துள்ளன. அதாவது பாரிய பிரச்சினையாக உள்ள காணி அபகரிப்பு, மண் அகழ்வு, கசிப்பு உற்பத்தி, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான வன்புணர்வுகள், களவுகள், வ்திகள் புனரமைக்கப்படாமை மற்றும நிர்ணயமற்ற விலை கள் பல்வேறு விதமான பிரச்சினைகள் உள்ளன

இவற்றினை கிராம மட்ட சங்க ங்கள் மூலமாகவே இலகுவாக தீர் ககவும் கையாளவும் முடியும். எனவே இனிவரும் காலங்களில் கிராம மட்ட சங்கங்களை பலப்படுத்துவ தோடு பல்வேறுபட்ட திட்டங்களை யும் முன்னெடுக்கவுள்ளோம். அதற்கு கிராம மட்ட சங்கங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொண் டுள்ளார். (2-6-4-250)

# மஹிந்தவை வீழ்த்தக்கூடிய வேட்பாளரை நிறுத்துவோம்

## ஐ.தே.க.சபையில் முழக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்குத் தயாரென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். எனவே ஜனாதிபதி தேர்தலை உடனடியாக நடத்துமாறு நாம் இந்த சபையில் சவால் விடுக்கின்றோம். நாம் தயாராகவே இருக்கின்றோம் என ஐ.தே. கட்சி எம்.பி.ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்து ள்ளார்.

எமது ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அரசு கவலைப்படத் தேவையில்லை. ஐ.தே.க உரிய நேரத்தில் மஹிந்தவை வீழ்த்தக்கூடிய சுப்பர் ஸ்டார் வேட்பாளரை நிறுத்தும். இதற்கு அரசாங்கம் தயாரா என ஐ.தே.க எம்.பி ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று முன்தினம் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டம் மீதான இரண்டாம் மூன்றாம் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு சவால் விடுத்து கேள்வியும் எழுப்பினார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில்,

அரசாங்கமானது முற்றுமுழுதாக மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. ஆகவே இதனை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாதுள்ளது. அபிவிருத்தியைக் காரணம காட்டி நாடு சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கி ன்றது. நாட்டின் வளங்கள் சீரழிக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலைமையில் தான் எதிர்க் கட்சிகள் விரும்புகின்ற தேர்தலை நடத்துவதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவரது இந்த அறிவிப்பினை நாம் வரவேற்கின்றோம்.

நாடு பாதுகாக்கப்பட வேண்டும். சீரழிவுகளுக்கு காரணமான இன்றைய அரசாங்கத்தை மாற்றிய மைக்க வேண்டும். எனவே உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். (2)

# பொதுபல சேனா அமைப்பை அடக்க பொன்சேகா எம்.பியாக வேண்டும்

## இராஜதந்திரி தயான் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவராகவும் சரத் பொன்சேகா பாராளுமன்ற உறுப்பினராகவுமானால் மாத்திரமே இலங்கை அரசியல் சமநிலைக்கு வரும் என இலங்கையின் இராஜதந்திரியான தயான் ஜயதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது பொது பல சேனாவின் அடாவடித்தனங்கள் எல்லைகளை மீறி இடம்பெறுகின்றன.

வீட்டு ஆக்கிரமிப்பு தொடர்பில் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் கடந்த தினத்தில் அமைச்சு ஒன்று ஆக்கிரமிக்கப்பட்டதை தொலைக்காட்சிகளில் பார்க்கக்கூடியதாக இருந்தது.

இந்த அளவு துணிச்சலாக அமைச்சு ஒன்றை முற்றுகையிடும் தைரியத்தை பொதுபல சேனாவுக்கு யார் வழங்கியது?

அவர்களால் தேடப்பட்ட வட்டர க்க விஜித தேரர் கொலையாளியோ, குற்றவாளியோ இல்லை.

இந்த சம்வங்களுக்கு தற்போதைய அரசியல் சமநிலை இன்மையே காரணம். சரியான எதிர்க்கட்சி ஒன்று இல்லை.

இந்நிலையைப் போக்குவதற்கு, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும் சரத் பொன்சேகாவையும் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களாக தேசிய பட்டியல் ஊடாக உள்வாங்க வேண்டும்.

அவர்கள் பாராளுமன்றத்துக்குள் செல்வதால், அரசாங்கத் தரப்பில் இருந்தும் அவர்களுக்கு ஆதரவுகளை வழங்க சில பாரா ளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கிறார்கள்.

அவ்வாறு செய்தால் மாத்திரமே அடுத்த வருடம் நடைபெறும் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இல்லையென்றால், ஐக்கிய தேசிய கட்சியின் காலம் அத்துடன் நிறைவடைந்து விடும் என்று அவர் தெரிவித்துள்ளார். (2)

# பொதுபல சேனா அமைப்புக்கு நான் அஞ்சப் போவதில்லை

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்புக்கு தான் எந்த விதத்திலும் பயப்பட போவதில்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணிகள் இன்றி இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு காணிகளை வழங்கி மீள்குடியேற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதனை செய்ய நான் கடமைப் பட்டுள்ளேன்.

இதேவிதமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கும் காணிகளை வழங்கி அவர்களை மீள்குடியேற்றம் செய்தோம்.

போர் காரணமாக இடம்பெயர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் என சகல இனத்தவர்களுக்கும் மீண்டும் காணிகளை வழங்கி மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த மக்களுக்கு எங்காது ஒரு இடத்தில் காணியை வழங்கி குடியேற்ற வேண்டும்.

வில்பத்து பிரதேசத்தில் வீதிக்கு அப்பால் இராணுவ முகாம் ஒன்றுள்ளது.

அதனை யும் அங்கிருந்து அகற்ற வேண்டுமென்றா பொதுபல சேனா கூறுகிறது எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார். (2)




# கண்ணீர் அஞ்சலி

மண்டைதீவு திருமுறைக் கழகத்தின் தலைவர்

உயர்திரு கந்தையா மாணிக்கலிங்கம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

திருமுறைக்கழகம்
மண்டைதீவு

(இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்



## மனமெனும் கூடு

கனவுகள் சுமந்திடும் கூடு
அதில் பலித்திடப் போவது
எதுவெனத் தேடு
கவலைகள் வளர்ந்திடும் காடு
இதை வளர்த்திட நினைத்திடின்
வந்திடும் நெருக்கீடு
அன்பினால் தொகுத்திட்ட ஏடு
பிரிவுகள் வருகையில்
உடைந்திடும் ஓடு
இன்பத்தில் மூழ்கிடும் வீடு
இதில் வன்மத்தீ மூட்டினால்
வீடே சுடுகாடு
ஆசைகள் குவிந்த மேடு
பேராசை பெருகிடின்
வாழ்வு தெருவோடு
உள் மனதோடு நீ உறவாடு
அது உணர்த்திடும் நல் வாழ்வு
அதை நம்பி நடை போடு
நல்லதையே என்றும் நாடு
தீயதை விட்டு ஓடு
உன்னையே போற்றிடும் நாடு

அ.அஜந்தன்
கந்தர்மடம்

## வெந்து தணியட்டும் ஊர்கள்...

நான் ஒரு பேராசிரியன் கணவன்
அணைவும் அதிர்ஷ்டமும் இல்லாதுபோனதால்
பதின்னான்கு வருடகாலம் தொண்டராசிரியராக
தொண்டாற்றியவளின் நியமனக் கனவு
கருச்சிதைவானது இருந்தும்
ஊரில் இன்றுமிவள் பெயர்...! ஆசிரியர்
ஐந்து வயதில் ஒரு பிள்ளை
நான்கு பக்கமும் வறுமையால்
சூழப்பட்டது என்வாழ்வு
நான்கடி சொச்சம் என் உயரம்
நாற்பத்தைந்தாண்டும் என் துயரம்
வறுமையும் புலமையும்
என்னிடம் உள்ள அசையும் சொத்து
இப்படி என்னை அறிமுகம் செய்தபடியே
புன்னகைக்கிறேன் புதுவருடத்தைப் பார்த்து
புதுவருடமே வருவாய்
மெல்ல என் திண்ணையில் அமர்வாய்
சிறிதேனும் வருவாய் தருவாய்
ஆண்டுதோறும் ஒரே திங்களில்
ஒரே கதியில் பிறக்கும்- நின்
பிறப்பு தனிச்சிறப்பு
இதனால்
இனத்தால் மதத்தால் மொழியால்
வேறுபட்டவர்கள்கூடஒன்றாகி நன்றாகிறார்
சர்க்கரைச்சாதமும் வெள்ளைச் சோறுமல்லாது
நான்குநிலமும் மாறிமாறி நலம் கேட்கும்-நின்
பிறப்பின் பலனறிய பஞ்சாங்கங்களும் படையெடுக்கும்
புனித நீரும் (மருத்துநீர்)
பூவும் புடைவையும் பாக்கும் பழமுமல்லாது
டீசல் டீசி எஸ் எல் என்றெல்லாம்
நகரப்புறங்களில் படமெடுப்பு நடக்கிறது- நின்
வருகைக்கு வடம்பிடிக்க
மேலும்
வெள்ளை நிறத்தில் ஆடை
அணிவதுதான் அதிர்ஷ்டமாமே
நல்லது பத்துமணியளவில் பார்
வெண்முகிலால் வேய்ந்ததை போலிருக்கும்
எம்தேசம்
வீட்டுக்கு ஒரு விதவை உள்ள காலத்தில்
வெள்ளைத்துணிக்கென்ன பஞ்சம்
சரி...
இம்முறை உனது சிறப்பென்ன
ஏழைகளுக்கான பொதியென்ன
பொருளாதாரத்தின் போக்கென்ன
வாக்குமாறாதென்று வாக்குறுதி
சொன்னவர்கள் போக்குமாறிப்
போனதற்கான பொறுப்பென்ன
வரதட்சணை என்ற வரம் பெறமுடியாமல்
வாடிவாடி வயதாகிப் போகின்ற
பிள்ளைகளின் வாழ்வென்ன
வங்கிகளுக்குள் அகப்பட்டு
ஆயுட் கைதியான
ஆபரணங்களுக்கு அடுத்த கட்டமென்ன
வேலையற்றவர் என்ற
அடையாளர்களுக்கான ஆறுதல் என்ன
புதுவருடமே...
உன்னிடம் அக்கினிக்குஞ்சொன்று
இருப்பின்- அதை
அங்கொரு காட்டினில்
பொந்திடை போடாதே
இங்கொரு வீட்டின் கூரையில் போடு
வெந்து தணியட்டும் ஊர்கள் அதில்
உரம் பெற்று வளரட்டும் வேர்கள்

விசு

## இமயம் தொட...

கண்களுக்கு
புலப்படுவதெல்லாம்
உண்மையாகிடாது
உன் கண்ணையும் தாண்டி
உண்மை ஒளிந்திருக்கும்
இருள் சூழ்ந்த அறை
எதனாலும் முழுமை பெறாது
ஒரு சிறிய தீபம் போதும்
தீபம் போல்தான் நீ
முழுமையாகிடு

மாவை.நா. கஜேந்திரன்

## மனக்குமுறல்

தண்டவாளத்தில் தனியாக
வாழ்க்கை எனக்கு தந்ததையும்
வாழ்க்கை என்னிடம் பறித்ததையும்
எண்ணிக்கொண்டு கண்களில்
கண்ணீருடன் பயணிக்கிறேன்
எனக்கே தெரியாது- என்
விதி தண்டவாளத்திலோ என்று

யோ.சிந்துஷா
திருநெல்வேலி

## பிரிவு

பழகும் போது இருந்தது இனிமை
எதிர்பார்க்கவில்லை இந்தப் பிரிவை
பிரியும்போது தெரிகிறது உன் அருமை
இதுதான் என் வாழ்வில் துயரம்

சங்கவி

# மௌனத்தின் தேடல் - 201



## சகுனம்

பல்லி சொன்னது
பாதியிலே வந்துவிட்டேன்
பூனை பாய்ந்தது
பூட்டையும் போட்டுவிட்டேன்
காகம் கரைந்ததென்று
கடைசிவரை வெளியில் வரவில்லை
மறுபடியும் பல்லி சொன்னது
பரீட்சை முடிந்தது
பாதியிலே போனது
என் பட்டம்
பாழாய்ப்போனது
என் வாழ்க்கை

அ.நளினாசினி
கோண்டாவில்

## மேதைகள்

தொ(ல்)லைக்காட்சி
மோகத்தால்
நாளை சமுதாயத்தில்
உருவாகக்கூடிய
மேதைகளை
அழிவின் பாதையில்
இட்டு செல்லாதீர்கள்
அவர்களை
நல்வழிப்படுத்துங்கள்
சமுதாயத்தவரே

இரா.ஜெ.துஷ்யந்த்
அளாவாவோடையூர்

## புதுவாழ்வு

போதும் போதுமென்று
நொந்து போய் வருந்தி
புதுவாழ்வைத்
தேடுகின்றீர்களா!
ஒரு புத்தகத்தை வாங்கி
வாசிக்கத் தொடங்கென்று
அறிஞர் இஸ்கர் சால்ஸ்சின்
இக்கூற்று எல்லோருக்கும்
எக்காலத்திலும் மாறாமல்
பக்கத் துணையாவதுடன்
தக்க பலனையும் தரும்

அரு.கனகராசா
சாவகச்சேரி

## கருத்தோடு கற்றல்

கல்வி கலாசாரப்
பண்பாட்டு விழுமியங்கள்
சீர்கெட்டு போயிருக்கும்
இக்கால கட்டத்தில்
கற்றற் செயற்பாட்டில்
கருத்தோடு ஈடுபடும்
இச்சிறுவனின் முயற்சி
திருவினையாக்கும்
பட்டங்கள் பதவிகள்
நிச்சயம் பெறுவான்

துரை, தென்மட்டுவில்

## விடியலைத் தேடி

பிஞ்சு வயதினிலே
கொஞ்சும் தாயிழந்து
நஞ்சு மனிதரினால்
நெஞ்சில் வடு சுமந்து
அறிவுப் பசி தீர்க்க
முடியாப் பிரயத்தனம்
முடிந்தால் உயிர்வாழ்வேன்
விடியல்தாயே -நீ
விரைவில் வரவேண்டும்

பி.சாந்தா
மல்லாகம்

## புத்தகப்பூச்சி

புத்தகப்பூச்சியாக
மாறும் குழந்தைகள்
புத்தகங்களே...!
குழந்தைகளைக்
கிழித்து விடாதீர்கள்...!

இ.சிந்துஜன்
தாவடி

## சிறுவனே

ஒற்றுமையின் பலம்
நற்பண்பின் தரமுணர்த்தி
சற்றும் தளராத உறுதியாய்
சுற்றம் சுகம் பேணவும்
உற்ற நண்பனிலும் உறுதுணை
கற்ற கல்வி கற்கும் பருவத்தில்
கற்காமை குற்றம் என
வெற்றுத்தாளில் எழுதியே
வெற்றிப்படிகள் காண்பிக்க
நெற்றியில் கைவைத்து
சற்று சிந்தனை செய்கின்றீரோ?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## படிப்பு

பட்டம் பல பெற வேண்டுமென்று
படிக்கின்றேன் படிக்கின்றேன்
படித்துக்கொண்டே இருக்கிறேன்
பாழாய்ப்போன மண்டையிலே
படிப்பும் ஏறுதில்லை
என்ன செய்வேன் ஏது செய்வேன்
என்பதெனக்கும் புரியவில்லை

திருமதி அ.மேரி அல்போன்சா
குருநகர்

## எழுந்திடு

மகனே!
ஏனிந்த யோசனை
காலமாற்றத்திற்கேற்ப
கல்வி நிலையும் மாறி
பாடசுமையும் கூடிவிட்டது
இதற்கு யோசித்தல்
காலம் கடந்து விடும்
உமது எதிர்கால
கனவுகளை நனவாக்குவது
கல்வியே எழுந்திடு- படி
நாளைய உலகில்
தலைவனாய் வாழ்ந்திட

வளர்மதி யுகன்
யா.செங்குந்த இ. க.

## கற்றிடுவோம்

விந்தை மிகு உலகிலே
விண்ணைத் தொடும்- காலம் தொட்டு
விட்டதால்- விரைந்தெழுவோம்!
மாறிவரும் மானிட சமூகம்- தன்
மானம் காத்து- தரணியிலே
வாழ்ந்துவிட- தமிழ் மொழியில்
கற்றிடுவோம்- பல கலைகள்
தமிழனாய் தரணியிலே வாழ...

எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய் வடக்கு

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 202



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.04.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

# 14.04.2014-14.05.2014



## தனுசு

**மூலம் , பூராடம்,**
**உத்தராடம் 1 ஆம் பாதம்;**

**வரன்கள் வாயில்**
**தேடி வரும் நேரம்!**

**அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆனந்த வாழ்க்கையை பெற முடியும் என்று சொல்லும் தனுசு இராசி நேயர்களே!**

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. நவக்கிரகங்களில் சுப கிரகமாகக் கருதப்படும் குரு, வக்ர நிவர்த்தியாகி பலம் பெற்று ராசியைப் பார்ப்பதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எடுத்த காரியங்களல் வெற்றி கிடைக்கும். சொன்ன சொல்லை நிறைவேற்றும் சூழ்நிலை உருவாகும்.

துணிவும், தன்னம்பிக்கையும் கூடும்.

கடந்த காலத்தில் உங்களோடு கருத்து வேறுபாடாக இருந்தவர்கள் இப்பொழுது அண்டி வந்து ஆதரவுக் கரம் நீட்டுவர். நாட்பட்ட நோய்கள் குணமாகும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர். தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற திறமை பெற்றவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவி செய்வர்.

சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் அலைச்சல் அதிகரிக்கும். அந்நிய தேசத்திற்கும், பிற மாநிலத்திற்கும் அடுத்தடுத்து உள்ள ஊர்களுக்கும் அடிக்கடி சென்று வரும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும். தொழில் சம்பந்தமாகவும், பயணங்களை மேற்கொள்ளலாம். தொடர்ந்து நட்பாக இருக்கும் நண்பர்களின் முன்னேற்றம் கருதியும் பயணங்களை மேற்கொள்ளலாம்.

எப்படி பயணித்தாலும் ஆதாயம் உங்களுக்கு உண்டு. ஆனால் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் உங்களுக்கு உருவாகலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியத்தை சீராக்கி கொள்ள இயலும். விரயாதிபதி செவ்வாய் 10இல் வக்ரம் பெற்றிருப்பது நன்மை தான். அவரோடு அஷ்டமாதிபதியும் இணைந்திருப்பதால் வீண் விரயங்களிலிருந்து விடுபடுவீர்கள். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்தவர்கள் கூட பொதுநலத்தில் ஈடுபட்டு புகழ் குவிக்க தொடங்குவர்.

பஞ்சமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் வாரிசுகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். வருங்காலத்தை எப்படி அமைத்துக்கொள்ளலாம் என்று திட்டமிடுவீர்கள். செவ்வாய்க் கிழமை தோறும் முருகப்பெருமான் வழிபாட்டையும், சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**மேஷ புதன், இடப புதனின் சஞ்சாரம்!**

மாதத் தொடக்க நாளில் மேட ராசியில் புதன சஞ்சரிக்கப் போகிறார். 7, 10இற்கு அதிபதி 5இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். வாயில் தேடிவரும் வரன்களை பரிசீலனை செய்வீர்கள். வரவேண்டிய முன்னோர் சொத்துக்கள் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும். குழந்தைகளின் உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். உதிரி வருமானங்களும் பெருகும்.

மே 1 ஆம் திகதி இடப ராசியில் புதனின் சஞ்சாரத்தால் உத்தியோகஸ்தர்களுக்கு சில மாற்றங்கள் உருவாகலாம். மேலதிகாரிகளின் அன்பிற்கு பாத்திரமாக வளர்ச்சியைக் கூட்டிக் கொள்வர். கூடுதல் சம்பளம் தரும் இடங்களில் உங்களை கூப்பிட்டுப் பணியில் அமர்த்திக் கொள்ள விரும்புவர். பழைய கடன்கள் பைசலாகும்.

**சுக்ரனின் பெயர்ச்சிக் காலம்!**

ஏப்ரல் 28 ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன உச்சம் பெறப்போகிறார். இதன் விளைவாக பயணங்களில் சில மாற்றங்கள் ஏற்படலாம். குடும்பப் பிரச்சினைகள் தலைதூக்கும். கூடுதல லாபத்தை எதிர்பார்த்த தொழிலில் ஓரளவே லாபம் கிடைக்கும். அதிக லாபமாக கிடைத்தாலும் அது ஏட்டில் இருக்குமே தவிர எதிரில் இருக்காது. அன்னிய தேசத்தொடர்பு அனுகூலம் தரும். பெண்வழிப் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். பெரிய மனிதர்களின் தொடர்பை பகையாக்கிக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைத் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குடும்பத்தினரின் பாச மழையில் நனையும் மாதமாகும். வருமானம் போதுமானதாக இருக்கும். வாரிசுகளாலும் உதிரி வருமானம் பெருகும். இடம், பூமி உங்கள் ெப்யரில் வாங்குவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இல்லம் தேடி வந்த சுப காரியப்பேச்சு நல்ல முடிவிற்கு வரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு போற்றும் விதத்தில புதிய பொறுப்புகள் வந்து சேரலாம். பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. செவ்வாயின் வக்ர நிவர்த்திக்குப் பிறகு சொத்துக்கள் வாங்குவதில் உள்ள தடைகள் அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

## வரன்கள் வாயில் தேடி வரும் நேரம்!

## சிவல்புரி சிங்காரம்



## மகரம்

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள்,**
**திருவோணம்,**
**அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**கரைந்த சேமிப்புகளை**
**ஈடு கட்டும் நேரம்!**
**செய்யும் தொழிலே தெய்வம்**
**என்று சொல்லும் மகர**
**இராசிநேயர்களே!**

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதுமட்டுமல்ல சுக ஸ்தானாதிபதியான செவ்வாயும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும். என்றாலும், இடையிடையே உடல்நிலைத் தொல்லைகளின் காரணமாக வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாமலும் போகலாம்.

எனவே நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது. உங்கள் ராசி அடிப்படையில் தனாதிபதியாகவும் சனி விளங்குவதால் அதன் வக்ர இயக்க காலத்தில் வருமானம் விட்டு விட்டு வரும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை வந்து சேரும். மனக்குழப்பம் தீரக் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. சுக்ர சனி பரிவர்த்தனையால் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். கூட்டாளிகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம் தான்.

எங்கோ ஒரு இடத்தில் தொழில் நிலையம் அமைத்து அதைக் கூட்டாளிகளை கண்காணிக்கச் சொல்லிவிட்டு, நீங்கள் சொந்த ஊரில் இருந்தால், லாபத்தை கைப்பற்றிக் கொள்ள இயலாது. எனவே தொழில் நிலையம் உங்கள் பார்வையில் இருக்கும் விதத்தில் அமைத்துக் கொள்வதே நல்லது. சகோதரர்களை அனுசரித்துச்செல்வதன் மூலம் சகாயங்களை அடைய முடியும்.

சந்திர மங்கள யோகம் இருப்பதால் உடன பிறப்புகளின் குடும்பத்தில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்த அழைப்புகள் வந்து சேரும். இதுவரை விலகிச் சென்ற சகோதரர்கள் தேவையை முன்னிட்டு உங்களை நாடி வரலாம். மன வேகமும், செயல் வேகமும் கூடும் இந்த நேரத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. விருந்தினர் தொல்லை அதிகரிக்கும். வியாபார நோக்கத்தோடு பழகும் ஒரு சிலரால் விரயங்கள் ஏற்படலாம்.

அஷ்டமாதிபதி உச்சம் பெற்றிருப்பதால் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயற்படுவதே நல்லது. பிறருக்கு நீங்கள் செய்யும் நன்மை அவர்களுக்குத் தீமையாக காட்சியளிக்கலாம். நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் உரிமை கொண்டாடி வரம்பு மீறிப் பேசுவதன் மூலம் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படலாம். வாய்ப்புகள் கைநழுவிச் செல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

சனி வக்ர நிவர்த்தியாகும் வரை தொடர்ந்து சனிக்கிழமை விரதமிருந்து சனீஸ்[illegible] வரரை வழிபட்டு வருவது நல்லது. [illegible] தீர்க்கும் சனி பகவான் பாடல்களை படித்து வழிபடுவதோடு இயன்ற அளவு அன்ன தானம், வஸ்திர தானம் போன்றவற்றைச் செய்யலாம். அங்காரக வழிபாட்டையும் யோக பலம் பெற்ற நாளில் செய்வது நல்லது.

**மேஷ புதன், இடப புதனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 14 ஆம் திகதி மேஷ ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசியைப் பொறுத்தவரை 6, 9இற்கு அதிபதியான புதன் மாதத் தொடக்கத்தில் சுக ஸ்தானத்தில் சஞ்சரிகும் பொழுது மாற்று மருத்துவத்தால் உடல நலத்தை சீராக்கிக் கொள்ளும் வாய்ப்பு கிட்டும். கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உயர்வும், ஊதிய உயர்வும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

மே 1ஆம் திகதி இடப ராசியில் புதன் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீக சொத்துக்களிலிருந்த பிரச்சினைகள் அகலும். பஞ்சாயத்துக்கள் வைத்துப் பல நாட்கள் ஆகியும் இன்னும் முடிவிற்கு வரவில்லையே என்று ஏங்கியவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியடைவர். புதிய இடத்தில் வீடு கட்டிக் குடியேறும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி ஒரு தொகையை செலவிடுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும்.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 27ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் உச்சம் பெறுகிறார். 5, 10 இற்கு அதிபதி உச்சம் பெறுவது யோகம் தான். நல்ல சம்பவங்கள் [illegible] இல்லத்தில் நடைபெறும். பழைய கூட்டாளிகளை விலக்கிவிட்டுப் புதிய கூட்டாளிகளை சேர்த்துக்கொள்வீர்கள். பதவி வாய்ப்புகள் தானாகவே வந்து சேரும். இரவு பகலாகப் பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். இம்மாதம் நவக்கிரக வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாகும். உடன் பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஏப்ரல் 28இற்கு மேல் தங்கு தடைகள் அகலும். தன வரவு கூடும். பங்காளிப் பகை மாறும். பக்கத்து வீட்டாரின் பகையும் அகலும். கணவன்-மனைவிக்குள் அன்யோனயம் அதிகரிக்கும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பதற்கு இணங்க வீடு தேடி வரும் வாய்ப்பை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். அங்காரகனையும், சனியையும் வழிபாடு செய்வதோடு சுய ஜாதகத்தில் தெசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளையும் தேர்ந்தெடுத்து செய்தால் நன்மைகளையே நாளும் சந்திக்க நேரிடும்.

(தொடரும்)


## கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டும் நேரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் குறுகியகால கற்கை நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக்காலை இடம்பெற்றபோது...






ஈழத்து இராமேஸ்வரம் என விளங்கும் புங்குடுதீவு ஊரதீவு பானாவிடை சிவன் தேவஸ்தான தேர்த்திருவிழா நிகழ்வில் பார்வதவர்த்தினி சமேதராய் இராமலிங்கேஸ்வர சுவாமி தேரில் திருவீதி உலா வருவதை படங்களில் காணலாம்.


பருத்தித்துறை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் புதிய இருமாடிக் கட்டட திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)





நல்லூர் றோட்டரி கழகத்தின் அனுசரணையில் யாழ்.பெனின்சுலா றோட்டரக்ட் கழகத்தினரின் ஏற்பாட்டில் அண்மையில் உடுவில் அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்ற போது.




கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நேவையூர் குறுக்கு வீதி அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இதன்போது சாவகச்சேரி பிரதேச தவிசாளரால் வீதி திறந்து வைக்கப்படுவதையும் அத்துடன் சரஸ்வதி சா...தேச அனுசரணையுடன் அமைக்கப்பட்ட முதலாவது வீடு பயனாளி ஒருவருக்கு தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி. அஞ்சலிதேவி சாந்தசீலனால் வழங்கிவைக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....வேறேதேனும் வேண்டுமா?

ஒன்றும் வேண்டாம் சாமி, வெளியே போனால் போதும்.

அப்படியா! சரி முன்னால் நடந்து செல். எதிரே தெரியும் பாறை இடுக்கு வழியே வெளியே செல்லலாம் என்று கூறிவிட்டு இருட்டில் மறைந்தது அந்த உருவம்.

பக்தருக்கு அந்த வார்த்தையில் நம்பிக்கையில்லை. காலையிலிருந்தே எவ்வளவு தரம்தான் குகையைச் சுற்றி சுற்றி வருவது? அப்போது தெரியாத இடுக்கா இப்போது தெரியப் போகிறது என்றவாறே முன்னால் சென்றவருக்கு இப்போது ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. ஒரு ஆள் புகுந்து வெளியே செல்லுமளவு பாறை இடுக்கு பெரியதாகி இருந்தது.

ஆச்சரியத்துடன் உள்ளே நுழைந்து வெளியே வந்தவருக்கு இன்னுமொரு ஆச்சரியம் காத்திருந்தது. முதல் நாள் அவருக்கு வ்ழிகாட்டிய நாய் அங்கே காத்திருந்தது.

நம்ப முடியாதவராய் தாம் வெளியே வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தார். இப்பொழுது அங்கே இடைவெளி ஏதும் இல்லை. ஒரு கழி மட்டுமே உள்ளே நுழையும் படியான சந்து தெரிந்தது. இவ்வளவு சிறிய பொத்தல் வழியாகவா நான் உள்ளே சென்று, மீண்டும் வெளியே வந்தேன் என்று ஆச்சரியத்துடன் குனிந்து பார்த்து அந்தச் சந்து வழியே, உள்ளே இருக்கும் சித்தர் பெருந்தகைக்கு நன்றி தெரிவித்தார்.

தனது முதல் பயணத்திலேயே சித்த சந்நியாசி ஒருவரைத் தரிசித்துவிட்ட மகிழ்ச்சி அவர் முகத்தில் தென்பட்டது. தனக்கு இப்படியொரு தரிசனத்திற்கு ஏற்பாடு செய்த அந்த நாயை கைகூப்பி வணங்கினார். அதுவும் அவரது நன்றியை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக வாலை ஆட்டியது.



வனதுர்க்கை

இப்போது நாய் வேறொரு பாதை வழியே அவருக்கு வழிகாட்டிச் செல்ல ஐந்து நிமிடத்திலேயே சுந்தர மகாலிங்கர் கோயிலை அடைந்தார். அங்கு இவருக்காக அந்தக் குழுவினர் காத்திருக்க, தமக்கேற்பட்ட தெய்வீக அனுபவத்தை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

இத்தனை பயணங்களில் தங்களுக்குக் கிடைக்காத் சித்தர் தரிசனம் முதல் பயணத்திலேயே அந்தப் பக்தருக்குக் கிடைத்ததைக் கேட்டுப் பரவசமானார்கள்.

இது கதையில்லை, நிஜமாகவே நடந்த சம்பவம். எனக்கு முன்னே சென்று வந்த பக்தர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டது.

அதனால் அந்தச் சின்ன துளை வழியே சித்தர்கள் உள்ளே சென்று தவம் இயற்றி வருவது சாத்தியமான ஒன்றுதான். சித்தர்களின் நடவடிக்கைகளில் வீண் சந்தேகம் கொண்டு அவநம்பிக்கை கொள்ள வேண்டாம். வாருங்கள் என்று கூறிய படி நடக்க ஆரம்பித்தார் அந்தத் துறவி.

ஏதோ பிரமிப்பிலிருந்து விடுபட்டவர்களாய், அவரைப் பின் தொடர்ந்தோம். ஏடு எழுத்தாணி மண்டபக் கதை உண்மை என்று இப்பொழுது நம்ப ஆரம்பித்தோம். ஏதாவது ஒரு காலகட்டத்தில் அதனைக் காணும் வாய்ப்பு நமக்கு வராமலா போய்விடப் போகிறது? இன்று இல்லாவிட்டால் அடுத்த மாதம் அதுவும் முடியாவிட்டால் அடுத்த வருடம். எப்படியும் ஒருநாள் அந்தத் தரிசனத்தைப் பார்த்தே விடுவது என்ற வைராக்கியத்துடன் அங்கிருந்து விடை பெற்றோம்.

### வனதுர்க்கை

மேலே சென்ற வழியே இப்பொழுது திரும்பிக் கொண்டிருக்கிறோம். ஏகப்பட்ட சறுக்கல். ஆனால் நிதானமாகக் கீழிறங்கிக் கொண்டிருக்கிறோம். சுமார் 5 கி.மீ. தூரம் நடந்திருப்போம்.

**ஆன்மீகம் 104**

சட்டென்று ஒரு திருப்பத்தில் நீண்டு வளர்ந்திருக்கும் மரத்தினடியில் ஒரு துர்க்கை. அவளின் எதிரே பெரியதாக ஓர் இரும்பு சூலம். மரக் கிளையில் வெண்கல மணிகள் தொங்கிக் கொண்டிருந்தன. கூடவே வன துர்க்கை என்ற அறிவிப்புப் பலகை வேறு.

அடிக்கடி அபிஷேகம் நடத்தி வழிபாடு செய்யப்பட்டதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. மலைவாசிகளால் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக வழிபடக் கூடிய இந்த வனதுர்க்கையை வணங்கிவிட்டு மேலே மேடேறினோம்.

### வனகாளி

மேட்டில் இலுப்பை மரமொன்றின் அடியில் மூன்றடி உயரமுள்ள காளி சிலை ஒன்று பயங்கரமாகக் காட்சி தந்து கொண்டிருந்தது. நான்கு கரங்கள். இடது கையில் வெட்டறிவாளையும், வலது கை சூலத்தையும் பிடித்திருந்தது. சூலத்தைத் தாங்கிப் பிடித்த நிலையில் மற்றொரு இடது கையும் மற்றொரு வலது கை அறுந்த சிரசைத் தாங்கிய நிலையிலும், விரித்த சடையினளாய் தொங்கவிட்ட நாக்கில் குங்குமம் தடவப்பட்டதால் இரத்த வெறியுடன் கோபக் கனல் வீசும் முகத்தினளாய் காணப்பட்டாள். *(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**23**

...பெற்றோல் என்கிற திரவம் வியர்வை என்கிற திரவத்தை விலைக்கு வாங்கியது.

உறவுகளைக் கரையில் கண்கலங்க விட்டுவிட்டு அவர்கள் மட்டும் கடல் தாண்டிப் போனார்கள்.

அவர்களின் புறம் சுகம் பெற்றது.

வாழ்க்கை வாசனைத் தைலம் பூசிக் கொண்டது.

ஆனால் அக வாழ்க்கை?

அவர்களுக்கு அங்கே ஓடிக் கொண்டே வாழத்தான் உரிமையுண்டே தவிர, உட்கார்ந்து வாழ உரிமையில்லை.

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, கம்பெனி பயணச் சீட்டுக்குப் படியளக்கும் போதுதான் மனைவியையும் பிள்ளைகளையும் அவசரமாய் ஓடிவந்து அடையாளம் பார்த்துவிட்டுப் போக முடியும்.

வியர்வையை அங்கே சிந்திக் கொண்டு, கண்ணீரை இங்கே சிந்திக் கொண்டு.... ஓ! அது சந்தோஷ நரகம்.

வசதியுள்ளவர்கள் மட்டும்தான் குடும்பத்தை அழைத்து குடித்தனம் செய்ய முடிகிறது.

வசதியற்ற தொழிலாளத் தோழர்கள் நிலவே என்னிடம் நெருங்காதே! நீ நினைக்கும் இடத்தில் நானில்லை...! பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அருமைச் சகோதரர் செட்டி நாட்டுச் சிரிப்பு மன்னன் சிவாவின் தலைமையிலும் என் மனங்கவர்ந்த மதுக்கூர் நாயகன் கலியமூர்த்தியின் ஆலோசனையிலும் தமிழர் நற்பணிக் கழகத்தின் வெண்படை வீரர்கள் அங்கே தேனீக்களின் புத்திரர்களாய்த் திரிகிறார்கள்.

அன்பின் வடிவமாய்த் திகழும் கவிதைக்காதலர்கள் சதாசிவம்- திருமதி சுமதி சதாசிவம்- பிச்சையன்- ராமகிருஷ்ணன்- ஜேம்ஸ்ராஜ்- ராதாகிருஷ்ணன் தம்புசாமி- முகைதீன் பிச்சை- பெருமாள்- ஏழுமலை, மெய்யழகன்- ஜெயசீலன்- சேகர்- சுந்தர்- பத்மநாபன்- காதர்- சிவராமன்- வசந்தி சிவராமன்- ராதா வாசுதேவன்- இசைக்குழு இப்ராஹிம்- நாகராஜன்- மாதவன்.




இவர்களும் இவர்களைப் போன்ற இனிய நண்பர்களும்- அந்நியமில்லாத அன்பு பாராட்டி என் இதயத்தின் ரத்த ஓட்டத்தில் கலந்து கரைந்து விட்டார்கள்.

ரத்த தானம் செய்கிறார்கள்; உயிரிழந்தோர் குடும்பத்துக்கு உயிர் கொடுக்கிறார்கள்; [illegible] களுக்குத் தோள் கொடுக்கிறார்கள்.

எப்படி உற்சாகமாய் இருக்க வேண்டுமென்பதைக் காற்று இவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

என் பாடல்களை அவர்கள் பாடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

என் கவிதைகளை உயிரின் ஆழத்திலிருந்து ஒப்பிக்கிறார்கள்.

'கவிதை கேளுங்கள்' ஒலியிழையின் மூல வெளியீட்டு விழாவை நற்பணிக் கழகம்தான் நடத்திக் கொடுத்தது.

சில பொழுதுகளில் எனக்குச் சின்னக் கோபம் வருவதுண்டு.

இந்தப் பரபரப்பான வாழ்க்கை தேவைதானா?

இரவு பகல் உழைக்கிறோமே! எதன் பொருட்டு?



நரம்புகள் அறுந்து போகும் இந்த அவசர வாழ்க்கை நல்லதுதானா?

இப்படித் தூக்கத்தை விவாகரத்துச் செய்துவிட்டு யாரோடு குடித்தனம் நடத்த?

உயிர் கொடுத்து எழுதுகிற இந்த எழுத்தையும் உழைப்பையும் வாழும் சமுதாயம் தனக்காக வரித்துக் கொள்கிறதா இல்லையா?

இப்படியெல்லாம் எப்போதாவது கேள்விகேட்டு இமை கவிழ்வேன்.

அரபு நாட்டுத் தமிழர்களோடு அளவளாவிய பிறகுதான் அறிந்து கொண்டேன்- என் ஒவ்வொரு எழுத்தும் வாசிக்கப்படுகிறது; ஒவ்வொரு கவிதையும் சுவாசிக்கப்படுகிறது.

என் உள்ளத்தில் கலந்த தோழர்களே!

என் உயிர் குறைந்தாலும் எழுதிக் கொண்டேயிருப்பேன்.

உங்களுக்காக-

உங்களைப் போன்ற உழைப்பாளிகளின் சந்தோஷ நிமிடங்களுக்காக.

-வைரமுத்து- *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008,2009,2010 கல்வியாண்டுகளில் யாழ். மக
# இன்று பட்டச் சான்றிதழ் பெறும் மாணவர்க



செல்வி லலிதா தங்கவேலு (B.A 2nd Upper) · செல்வி அருந்ததி முருகதாஸ் (B.A 2nd upper) · திரு முருகன் சதீஸ் (B.A 2nd Upper) · செல்வி வனசா ரங்கநாதன் (B.A 2nd Lower) · திருமதி கௌசல்யா ஸ்ரீகாந்தன் (B.A 2nd Lower) · திரு சிவநந்தன் சிவசங்கர் (B.A 2nd Lower) · செல்வி சசிதா சண்முகநாதன் (B.A 2nd Lower) · திருமதி காந்திமதி ஜெயக்குமார் (B.A 2nd lower) · செ… மயூரி தஜா (B.A 2nd lower)

செல்வி மேகலா செல்வராஜா (B.A) · செல்வி அர்ச்சனா ஏகாம்பரநாதன் (B.A) · செல்வி அமுதகௌரி குகநேசன் (B.A) · திரு கனகசிங்கம் கலைச்சந்திரன் (B.A) · திரு ஸ்ரீஸ்கந்தராஜா மயூரன் (B.A) · செல்வி நிரஞ்சனா பபை வீரசிங்கம் (B.A) · செல்வி யாமினி யோகேஸ்வரன் (B.A) · செல்வி தமிழினி பிரிட்டோ (B.A) · தி… பகீரதி…ன் (B.A)

செல்வி கவிதா சுப்பிரமணியம் (B.A) · செல்வி நளாயினி செல்வரட்ணம் (B.A) · செல்வி கேதுஷா மயூரகிரிநாதன் (B.A) · செல்வி வசந்தி ஜெயக்கொடி (B.A) · செல்வி ரவிப்பிரியா பாலசிங்கம் (B.A) · செல்வி மதுரா மகாலிங்கசிவம் (B.A) · திருமதி தர்சிகா நவநீதகுமரன் (B.A) · திருமதி ராஜினி வசந்தசில்வா (B.A) · …வி ஜீவனா ஞானந்தன் (B.A)

திருமதி அனுசியா திலீபன் (B.A) · செல்வி வாசுகி கனகரட்ணம் (B.A) · திரு. பார்போன் லெஸ்லி (B.A) · செல்வி. சத்தியா சுந்தரலிங்கம் (B.A) · செல்வி. கௌரீஸ்வரி வேலுப்பிள்ளை (B.A) · திரு பரயநாதன் சசிகரன் (B.A) · திரு [illegible] ஜோன் அல்போன்ஸ் (B.A) · திரு செல்வராசா சொருபன் (B.A) · திருமதி சுமித்திரா ஜெகநாதன் (B.A)

செல்வி ஜெனிற்றா ஜோதினி அலெக்ஸாண்டர் (B.A) · செல்வி நயாளினி பொன்னம்பலம் (B.A) · செல்வி கட்சாயினி பாலசுப்பிரமணியம் (B.A) · திருமதி டானியல் பிராங்கள் ஆன் நிஷாந்தினி (B.A) · திரு திருத்துவராஜா தீவாகரன் (B.A) · திருமதி நிகாஜினி ரவிதாஸ் (B.A) · திருமதி சர்மிளா கபிலன் (B.A) · செல்வி சந்தியவதனா கந்தசாமி (B.A) · திரு சண்முகராஜா தவராஜன் (B.A)

திருமதி கிறிஸ்ரிஜெயசீலன் உஷாந்தினி (B.A) · திருமதி ஜெயரோகினி வசந்தன் (B.A) · திரு யோசுதாசன் அந்தனிஸ் பெர்னாண்டோ (B.A) · செல்வி சகாயமேரி யேசுதாஸ் (B.A) · செல்வி சிவரஞ்சனி சிவானந்தராஜா (B.A) · செல்வி சுபைதா தவராசா (B.A) · செல்வி கலாதேவி பாலசுந்தரம் (B.A) · திருமதி விமலாவதி செல்வவீரசிங்கம் (B.A) · திருமதி சிவரூபன் கஜேந்தினி (B.A)

திரு மோகனநாதன் திவாகரன் (B.A) · திருமதி அருள்மேரி அருள்நேசன் கோமஸ் (B.A) · திரு தாசிவம் கோகிலாதரன் (B.A) · திரு கயிலாயபிள்ளை பிரபாகரன் (B.A) · திரு சண்முகநாதன் கௌசிகன் (B.A) · திரு அருணகிரி வினோராஜ் (B.A) · திரு மகாலிங்கம் சிறிஸ்கந்தராசா (B.A) · திரு கனகசபாபதி பாலசீலன் (B.A) · திரு கணபதிப்பிள்ளை சஞ்சீவநாத…

செல்வி சுதர்சினி யேசுதாசன் (B.A) · மிபோனி டானியல் (B.A) · லிங்கநாயகம் ரமணன் (B.A) · ரமணன் நளாயினி (B.A) · செல்வி. சுஜாதா சுப்பிரமணியம் (B.A) · செல்வி பொன்னையா யோகேஸ்வரி (B.A) · செல்வி கந்தசாமி இராஜேஸ்வரி (B.A) · செல்வி அஜிதா யோகநாதன் (B.A) · செல்வி சிவகஜனி சிவஞானம்…

திரு சின்னராசா அனுசன் (B.A) · திருமதி ரஞ்சித் குமுதினி (B.A) · திருமதி சிவராசா சாந்தினி (B.A) · திருமதி கிரிசாயினி விஜயகுமார் (B.A) · திருமதி ஜெயரதி திரிவிக்கிமராசா (B.A) · திருமதி மகிந்தன் புஸ்பலோஜினி (B.A) · திரு முருகையா ஹரன் (B.A) · செல்வி பிருந்தா குலசேகரம் (B.A) · செல்வி ராதிகா சின்னையா…

செல்வி ஜெனிற்றா லோகநாதன் (B.A) · செல்வி மலர்விழி கயிலைநாதன் (B.A) · திருமதி குமாரி மனோரஞ்சன் (B.A) · திரு [illegible] (B.A) · திரு [illegible] (B.A) · திரு நவரத்தினம் கெங்காசுதன் (B.A) · திரு கதிரவேலு சுதாகரன் (B.A) · திருமதி ரங்கன் சந்திரலைலா (B.A) · செல்வி ஆறுமுகசாமி நந்தினி…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# . பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக கல்வி கற்று
# களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி ஊூரி தங்கராஜா (B.A 2nd lower) | திரு நல்லையா கஜீதரன் (B.A 2nd Lower) | செல்வி கவிதா அரியரத்தினம் (B.A) | செல்வி சசிகலா மதனகோபாலசாமி (B.A) | திரு சிவப்பிரகாசம் ரஜனிகாந் (B.A) | திரு ராசசிங்கம் ஸ்ரீசங்கர் (B.A) | செல்வி குகனி பாலசிங்கம் (B.A) | செல்வி நர்மிளா குமாராசன் (B.A) | திருமதி காயத்திரி கதீஸ்வரன் (B.A)

திருமதி மகீரதி ரமணன் (B.A) | செல்வி கவிதா மரியதாஸ் (B.A) | திரு யேசுநாயகம் நிதர்சன் (B.A) | செல்வி அலிஸ் ஏஞ்சல்ஸ் மரியாம்பிள்ளை (B.A) | செல்வி கௌரி சுப்பிரமணியம் (B.A) | திருமதி சயேசன் ஜெனிற்ரா (B.A) | செல்வி நடராசா வதனா (B.A) | செல்வி சங்கீதா சிறிகாந்தன் (B.A) | திருமதி உஷாந்தி சுதன் (B.A)

செல்வி ஜீவனா ஜீவானந்தன் (B.A) | செல்வி மாலினி பாக்கியநாதன் (B.A) | செல்வி தாட்ஷாயினி உருத்திரகுமார் (B.A) | திருமதி. மைதிலி சபேசன் (B.A) | செல்வி சுஜிதா தர்மலிங்கம் (B.A) | திருமதி கிறிஸ்ரினாட் பிரியதர்சினி (B.A) | செல்வி யசோதரா புகழேந்தி (B.A) | செல்வி. தயாளினி மாணிக்கவாசகர் (B.A) | திருமதி புஸ்பாந்தமாலா சுகந்தன் (B.A)

திருமதி சுமித்திரா ஜெகநாதன் (B.A) | செல்வி தெய்வமலர் ஆழ்வான் (B.A) | செல்வி வாசுகி முருகையா (B.A) | செல்வி கனிற்றா சுஜந்தினி யோசேப் (B.A) | செல்வி பிறேமினி பாலசிங்கம் (B.A) | செல்வி ஜெயகிரிசா கதிர்காமநாதன் (B.A) | திரு இரட்ணசிங்கம் கௌரிவாசன் (B.A) | திருமதி மலர்விழினி சசிகரன் (B.A) | திருமதி ஸ்ரீவதனி ஜெயசதீஸ் (B.A)

திரு சண்முகராஜா தவராஜன் (B.A) | திரு கம்பிநாயகம் நாகநாதன் (B.A) | செல்வி தயாழினி விஸ்வநாதன் (B.A) | செல்வி சிவசக்தி கோபாலசிங்கம் (B.A) | திருமதி ஸ்ரீகுமார் சிறோமிபேட்டில் (B.A) | செல்வி அனுசா இராசரட்ணம் (B.A) | திருமதி அனோஜா எடிஅரிசன் (B.A) | செல்வி பாரதி நாகேந்திரராசா (B.A) | திருமதி ராஜ்சேகரன் மேரிஜெனஸ்ரின் (B.A)

திருமதி சிவரூபன் கஜேந்தினி (B.A) | செல்வி கார்த்திகா சங்கரநாதன் (B.A) | திரு தர்மகீர்த்தி சத்தியகீர்த்தி (B.A) | திருமதி. கடம்பவனவாசினி இருபாகரன் (B.A) | செல்வி போல்குணசேகரம் பூகிறிஸ்ரா (B.A) | அருட்சகோதரி மேரி இசபெல்லாராணி (B.A) | செல்வி சண்முகவதனி சண்முகநாதன் (B.A) | செல்வி தர்மலிங்கம் சிவாஜினி (B.A) | திருமதி லதாஜினி செந்தில்குமரன் (B.A)

திரு கணபதிப்பிள்ளை சஞ்சீவநாத் (B.A) | திரு சண்முகநாதன் நிரோஷிகன் (B.A) | திரு பாலசுப்பிரமணியம் சுஜேந்திரன் (B.A) | திருமதி ஞானசீலன் மயூரி (B.A) | திரு ஜெயகாந்தன் ஜெயந்திரன் (B.A) | செல்வி ராஜனி சோதிநாதன் (B.A) | செல்வி ஜெனிஸ்ரினா சுகிர்தினி திலகராசா (B.A) | செல்வி சிவாஜனி வீரவாகு (B.A) | செல்வி விநோதினி கனகசிங்கம் (B.A)

செல்வி சிவகஜனி சிவஞானம் (B.A) | செல்வி சியாமளா தேவராசா (B.A) | செல்வி செக்கியா. திருநாவுக்கரசு (B.A) | திரு திலகநாதன் சத்யதீபன் (B.A) | திரு. பாலகணேசன் அருள்பாலமேனன் (B.A) | திரு செல்வநாயகம் ஜீவபிரதாப் (B.A) | திரு கணேசமூர்த்தி மோகனதாஸ் (B.A) | திரு சிவராஜா சஞ்சீவன் (B.A) | திருமதி ரோக்ஷினி அருள்ஞானரட்ணம் (B.A)

செல்வி ராதிகா சின்னையா (B.A) | செல்வி சிவாஜினி குமாரசாமி (B.A) | திருமதி லெனின் காதிகர் (B.A) | திரு செல்வராசா பிரகாஷ் (B.A) | செல்வி மதுரா செல்வநாயகம் (B.A) | செல்வி ஸ்ரீரமணி இராஜேந்திரன் (B.A) | செல்வி கனிமொழி மகேஸ்வரன் (B.A) | திருமதி தனுசியா யசிதரன் (B.A) | செல்வி சியாளி சற்குணநாதன் (B.A)

செல்வி ஆறுமுகசாமி நந்தினி (B.A) | திருமதி சுதாமதி தயாபரன் (B.A) | திருமதி கிறிஸ்டின் றொசான் (B.A) | செல்வி கௌசி பெர்னாண்டோ சுதர்சன்யோகராசா (B.A) | செல்வி ரோகினி விஸ்வலிங்கம் (B.A) | செல்வி சாரங்யா மகேந்திரலிங்கம் (B.A)

**யாழ். பல்கலைக்கழக**
**வெளிவாரி**
**மாணவர் ஒன்றியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்குமா தென்னாபிரிக்கா?

முதலில் இந்தியா, அதற்கடுத்து நோர்வே, இப்போது தென்னாபிரிக்காவின் கைக்குப் போயிருக்கிறது பந்து. இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்கு ஏற்பாட்டாளர் அல்லது அனுசரணையாளர் என்ற ஏதோவொரு பெயரில் நடுநிலை வகிப்பதற்கான வாய்ப்பே இப்போது தென்னாபிரிக்காவுக்கு கிடைத்துள்ளது. முதலில் இந்தியாவின் ஜி.பார்த்தசாரதி, பின்னர் நோர்வேயின் எரிக்சொல்ஹெய்ம், ஜப்பானின் யசூசி அகாசி, இந்த வரிசையில் இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்கான விசேட தூதுவராக இப்போது இடம்பிடித்துள்ளவர் தென்னாபிரிக்காவின் சிறில் ரமபோசா. இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தி நிலையா அமைதி, நல்லிணக்கத்தை உருவாக்கும் பொறுப்பு இப்போது சிறில் ரமபோசாவின் கைக்கு வந்திருக்கிறது.

இதற்கு முன்னர் நோர்வேயும் இந்தியாவும் இந்த முயற்சிகளில் இறங்கியபோது, இலங்கையில் ஆயுதப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. ஆனால், தென்னாபிரிக்கா களமிறங்கும் சூழல் வித்தியாசமானது. அது போர்ச்சூழல். இது போருக்குப் பிந்திய சூழல். அது போரிலிருந்து அமைதியை உருவாக்குவதற்கான முயற்சி. இது போரினால் உருவாக்கப்பட்டு விட்டதாக பிரகடனப்படுத்தப்பட்ட அமைதியை காப்பாற்றுவதற்கான முயற்சி. அதாவது போர் முடிவுக்கு வந்த போதிலும் இன்னமும் உருவாக்கப்படாத நிலையான அமைதியை எட்டுவதற்கான முயற்சிகளே இப்போது நடக்கின்றன. முன்னர் நோர்வே மற்றும் இந்தியா என்பன அமைதி முயற்சியில் இறங்கியபோது, அரசாங்கத்துக் கும் ஆயுதம் தாங்கிய தமிழ் அமைப்புகளுக்கும் இடையில் படைபல ரீதியான ஒருவித சமபல நிலை காணப்பட்டது. அது நிலையானதாக இல்லாவிடினும், ஒருவித நெகிழ்வுப் போக்குச் சமநிலை தென்பட்டது. இதனால், இரு தரப்புமே ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதற்குத் தயாராக இல்லாத நிலையும் நழுவிக் கொள்ளும் நிலையும் காணப்பட்டன.

இரு தரப்புக்குமே போர் என்ற இன்னொரு தெரிவு இருந்தால், அமைதியை நோக்கி அவர்களைத் திருப்புவது கடினமானதாக இருந்தது. அதன் விளைவாக, இரு தரப்பையும் அவ்வப்போது பேச்சு மேசைக்கு இழுத்து வரவே பெரும் போராட்டம் நடத்தும் நிலை காணப்பட்டது. நோர்வேயும் இந்தியாவும் இலங்கை யில் அமைதியை உருவாக்க முயன்று தோல்வியை சந்தித்த நாடுகள். இந்த முயற்சியில் இனிமேல் இல்லையென்றளவுக்கு இந்த நாடுகள் நொந்து போயுள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இப்போது நிலைமை முற்றிலும் வேறுபட்டது.

முன்னர் விடுதலைப் புலிகள் இருந்த இடத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிடித்துள்ளது. முற்றிலும் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற பலம் மட்டும் அவர்களுக்கு உள்ளது. மற்றபடி, பேச்சு இல்லாவிட்டால் போர் என்று மாற்றுத் தெரிவொன்றை நாடும் வாய்ப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை. அதற்கு முன்னுள்ள முதலும் கடைசியுமான தெரிவு, அரசாங்கத்துடன் பேசி தீர்வொன்றை எட்டுவதற்காகவே உள்ளது. என்றாலும், தமது அரசியல் பலத்தை வைத்தும் வெளிநாடுகளிலுள்ள ஆதரவைக் கொண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேரம் பேசவே முனைகிறது. அதாவது அரசாங்கத்தின் இழுப்புக்கேற்ப செல்லாமல், தமக்கென வரையப்பட்ட கோட்டுக்குள் நின்று ஆட முனைகிறது.

கூட்டமைப்பின் இந்த இறுக்கமான போக்கும் அரசாங்கத்தின் விட்டுக்கொடுக்காத தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கூட்டமைப்பை கொண்டுவரும் போக்கும் தான், போருக்குப் பின்னர் அமைதியை உருவாக்குவதற்கான பேச்சுக்கள் இடை நடுவில் நின்று போனதற்குக் காரணம். ஒருவகையில் சொல்லப் போனால், ஜனநாயக ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுள்ள பலமானது விடுதலைப் புலிகளை விடவும், சக்தி வாய்ந்த தரப்பாக அதனை பல நாடுகளால் ஏற்றுக்கொள்ள வைத்துள்ளது.

தமிழர் தரப்பில் பேசும் தரப்பு மாறியுள்ளபோதிலும், ஆயுதப் போராட்டமொன்று இல்லாத சூழலிலும் இரு தரப்பும் சுயமாக ஒரு பேச்சு மேசையில் அமரத்தக்க நிலையில் இல்லை. இந்த இடைவெளிதான், புதியதொரு நடுநிலையாளர் பாத்திரத்தை உருவாக்க வழி வகுத்துள்ளது. இந்த அரங்கினுள் பிரவேசிப்பதற்கான வழியை தென்னாபிரிக்காவுக்கு ஏற்படுத்திக்கொடுத்திருப்பது இரண்டு விடயங்கள். முதலாவது, அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களை மீளத் தொடங்க முடியாத சூழல், இரண்டாவது ஜெனிவா தீர்மானங்கள்.

தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள், அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ளன. கடைசியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சர்வதேச விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு வழி வகுத்துள்ளது. இந்த விசாரணையின் விளைவு என்னவாக இருந்தாலும் இந்த விசாரணையால் அரசாங்கம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. எதிர்கொள்ளப் போகிறது என்பதில் மட்டும் சந்தேகமில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூலம் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படவுள்ளது.

அதற்கு அரசாங்கம் ஒத்துழைக்காது போனால், வேறு வழிகளில் இலங்கைக்கு நெருக்கடி கொடுக்க மேற்கு நாடுகள் முனையும் சூழல் தான் தற்போது நிலவுகிறது. சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டாலும் அதற்கடுத்து என்ன செய்வது என்ற சிக்கல் மேற்கு நாடுகளுக்கு இருக்கவே செய்கிறது. அது அரசாங்கத்துக்கு ஒரு சிக்கலான விடயமாக இருந்தாலும் சர்வதேச விசாரணைகளில் தாம் குற்றவாளியாக்கப்படுவதிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றே கருதும்.

எனவே, இயல்பாகவே ஏதாவதொரு உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக இந்த விவகாரத்துக்குப் பதிலளிக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஜெனிவா தீர்மானம் ஐ.நா. விசாரணைக்கு மட்டுமன்றி உள்நாட்டு விசாரணைகளையும் வலியுறுத்தியுள்ளது. இந்த நிலையில் இப்போது சர்வதேச விசாரணையென்ற பொறியிலிருந்து முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்கேனும் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் இருக்கின்ற ஒரே வழி உள்ளகப் பொறிமுறை ஒன்றுக்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்வதுதான். இது சர்வதேச சமூகம். இலங்கை அரசுக்காக விட்டுவைத்துள்ள ஒரு தப்பிக்கும் வழி. அதாவது, தென்னாபிரிக்காவை இந்த அரங்கினுள் கொண்டு வருவதற்கான வழியென்று கூடச் சொல்லலாம்.

தென்னாபிரிக்காவை இலங்கை அமைதி விவகாரத்துக்குள் கொண்டு வருவதன் மூலம், உள்ளக பொறிமுறையின் மூலம் பொறுப்புக்கூறல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மட்டுமன்றி இறுதியான சமாதானத்தையும் எட்டுவதற்கு வழி தேடலாமென்று மேற்குலகம் கருதியிருக்க வாய்ப்புகள் உள்ளன.

முன்னர் இலங்கை அமைதி முயற்சிகளுக்குள் நோர்வேயை கொண்டு வந்தது மேற்குலகம் தான். அதாவது, உலகில் உள்நாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவினால் பயன்படுத்தப்படும் ஒரு நாடாகவே நோர்வே இருந்து வந்தது. ஆனால், இலங்கையில் அந்த நாடு தோல்வி கண்டுவிட்ட நிலையில் மீண்டும் அதனைக் களமிறக்க முடியாது. அதேவேளை, அயல் நாடான இந்தியாவும் மீண்டும் சமாதான முயற்சிகளில் இறங்கத் தயாராகவில்லை. இதனால், தென்னாபிரிக்காவுக்கான களத்தை மேற்குலகம் திறந்துவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

தனியே பொறுப்புக் கூறல் மட்டும் இலங்கையில் எதிர்நோக்கப்படும் சவால் அல்ல. பொறுப்புக் கூறலுடன் நிலையான அமைதியை உருவாக்குவதற்கான அரசியல் தீர்வும் இங்கு அவசியமானது. அந்த இறுதியான அமைதியையும் நிலையான அரசியல் தீர்வையும் உருவாக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியே ஆக வேண்டும். தெரிவுக்குழுவுக்கு வந்தால் தான் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசலாம் என்பது அரசாங்கத்தின் பிடிவாதம். தெரிவுக்குழுவுக்கு வர முன்னர், அரசியல் தீர்வு குறித்த இணக்கப்பாடொன்றுக்கு அரசாங்கம் வர வேண்டும் என்பது கூட்டமைப்பின் பிடிவாதம்.

இந்த இரண்டுமே ஒன்றையொன்று உந்தித்தள்ளும் இயல்புடையதாக இருப்பதால், தாமாக முன் வந்து பேச்சுக்களை ஆரம்பிக்கும் சூழல் இல்லை. அரசாங்கம் பெரும்பான்மையின அடிப்படைவாதிகளைத் திருப்திப்படுத்துவதிலேயே குறியாக இருப்பதால் கடந்து வந்த பாதைக்கு அதனால் மீளத் திரும்பிச் செல்ல முடியாது.

எனவே, ஏதோவொரு சக்தியின் துணையுடன்தான், அந்தப் பாதைக்குத் திரும்ப முடியும். அதுதான் தென்னாபிரிக்கா. இப்போது தென்னாபிரிக்கா, இந்த அரங்கினுள் பிரவேசிப்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா, இலங்கையிலும் தென் சூடானிலும் அமைதியை ஏற்படுத்துவதற்கான சிறப்புத் தூதுவராக ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் பிரதித் தலைவரான சிறில் ரமபோசாவை அறிவித்திருந்தார்.



இதன் பின்னர் அரசதரப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தலைமையிலும் தென்னாபிரிக்கா சென்று பேச்சுக்களை நடத்திவிட்டுத் திரும்பியுள்ளது. இதன் அடுத்த கட்டம் என்னவென்றால், சிறப்புத் தூதுவர் சிறில் ரமபோசா மேமாத இறுதியில் அல்லது ஜூன்மாத தொடக்கத்தில் கொழும்பு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவையும் கூட்டமைப்புத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார். அதன் பின்னர்தான், இந்த விவகாரத்தில் தென்னாபிரிக்காவினது நடுநிலையாளர் பாத்திரம் உறுதிப்படுத்தப்படும்.

இரு தரப்புகளையும் பேச்சு மேசைக்குக் கொண்டு வந்து இறுதியான அரசியல் தீர்வொன்றையும் நிலையான அமைதியையும் உருவாக்கும் முயற்சிகள் அதன் பின்னர்தான் ஆரம்பிக்கும். இது எந்தளவுக்கு வெற்றிபெறும் என்பது அரசாங்கத்தினதும் தமிழத் தேசியக் கூட்டமைப்பினதும் அணுகுமுறைகளில்தான் தங்கியுள்ளது என்று சண்டே ரைம்ஸ் இதழுக்கு இரா. சம்பந்தன் அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

தென்னாபிரிக்கா எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப்படும் என்பதைப் பொறுத்தே இதன் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படும். விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு நோர்வேயின் சமாதான முயற்சிகள் பயன்படுத்தப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகிறது. அதனை எரிக்சொல்ஹெய்ம் நிராகரித்துள்ள போதிலும் நோர்வே அமைதி முயற்சிகளில் இறங்கிய பின்னர்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அழிவு ஆரம்பமாகியது என்பதில் சந்தேகமில்லை.

அதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் விட்ட தவறா? மேற்குலகினது சூழ்ச்சியா? அரசாங்கத்தினது தந்திரமா? என்பது விரிவாகப் பார்க்கப்பட வேண்டிய வேறொரு விவகாரம். ஆனால், நோர்வேயினது அமைதி முயற்சிகளின் தொடக்கம் விடுதலைப் புலிகளின் அழிவில் போய் முடிந்தது என்பதே வரலாறாக இருக்கப் போகிறது. இத்தகைய பின்னணியில் தென்னாபிரிக்காவினது அமைதி முயற்சிகளை அரசாங்கம் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகிறது என்பதைப் பொறுத்தே இதன் வெற்றியும் தோல்வியும் தீர்மானிக்கப்படும்.

அதாவது பெரும்பான்மையினத் தேசியவாதிகளை திருப்திப்படுத்தும் நிலைப்பாட்டிலிருந்து விலகி, பிரச்சினைக்குத் தீர்வு காணும் இதய சுத்தியுடன் ஒத்துழைத்தால் மட்டுமே இந்தப் பேச்சுக்கள் வெற்றி பெறும். உண்மைகளை ஒப்புக்கொண்டு பொறுப்புக் கூறினால் மட்டுமே, உண்மையான நல்லிணக்கம் சாத்தியப்படுமென்று ஈஸ்டர் ஆராதனையில் மன்னார் ஆயர் இராசப்பு ஜோசெப் ஆண்டகை குறிப்பிட்டிருந்தார்.


உண்மையானநல்லிணக்கத்தை எட்டுவதற்கு திறந்த மனதுடன் பேசுவதும்பிரச்சினையைத்தீர்க்க வேண்டுமென்ற இதயசுத்தியான எண்ணமும் அவசியம். அத்தகைய பேச்சுக்களின் முடிவில்தான், நிலையான அரசியல் தீர்வொன்றை எட்ட முடியும். ஆனால், அரசாங்கம் அத்தகையதொரு நிகழ்ச்சி நிரலுக்கு உடன்படுமா அல்லது வெறுமனே ஜெனிவா பொறியிலிருந்து தப்பிப்பதற்காக மட்டும் ஒரு உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்குவதற்கு தென்னாபிரிக்காவை பயன்படுத்த முனையுமா என்று பார்க்க வேண்டியுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், தென்னாபிரிக்க பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதே அதன் உடனடிக் கரிசனையாக இருக்கலாம். ஆனால், அது உடனடியாக எடுத்த எடுப்பிலேயே சாத்தியப்படும்போலத்தெரியவில்லை. அது பேச்சுக்களின் இறுதியான கட்டமே என்று இரா. சம்பந்தன் குறிப்பிட்டுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவைஅமைத்து ஜெனிவா நெருக்கடியிலிருந்து தப்பிக்க அரசாங்கம் வகுக்கும் வியூகத்துக்குள் சிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவில்லை என்பதை சம்பந்தனின் இந்தக் கருத்து எடுத்துக் காட்டுகிறது. இப்படிப்பட்ட சூழலில், இரு தரப்பையும் தமது வழிக்குக் கொண்டுவந்து பேச்சு மேடையில் அமர வைப்பது தென்னாபிரிக்காவுக்கு ஒன்றும் இலகுவானதாக இருக்கப் போவதில்லை. இதுவே இப்படியென்றால் இறுதியான அரசியல் தீர்வையும் உண்மையான நல்லிணக்கத்தையும் உருவாக்குவது எந்தளவுக்கு கடினமான பணியாக இருக்குமென்று சொல்லத் தேவையில்லை.


-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org


# 2008,2009,2010 கல்வியாண்டுகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக கல்வி கற்று இன்று பட்டச் சான்றிதழ் பெறும் மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி சிவலதவி சிவநாதன் B.A
பி.கே. யூகிறிஸ்ரா B.A
திருமதி வித்தியாலெட்சுமி உமாசுதசர்மா B.A
திருமதி ஜெகஜனனி ஆனந்தகிருஸ்ணசர்மா B.A.
திருமதி பகீரதி கங்காதரன் B.A
திருமதி நி.இந்திராணி B.A
ஆர். ஜெயகரன் B.A
குணரெத்தினம் நிமலினி B.A



செல்வி ஞானசம்பந்தன் ஸ்ரீதேவி B.A
வயிரமுத்து விமலேஸ்வரன் B.A
கே.நிரோஜினி B.A
B.A
குணசிங்கம் மிதுளா B.A
திருமதி விஜிதா. விஜயரூபன் B.A
அம்புரோஸ் அன்ரனி கொன்ஸ்ரன்ரைன் B.A
சர்மிலா மகாலிங்கம் B.A



சிவகரன் தர்மிளா B.A
வேலாயுதம்பிள்ளை ராஜதீபன் B.A
பிரதீபா கிருபாகரன் B.A
திருமதி தனுசியா மகாதேவன் B.A
திருமதி வசந்தன் சர்மிலா B.A
சுஜன் உதயகுமாரி B.A
எஸ். நிமல்ராஜ் B.A
எஸ். செல்வராசன்



கே. ஈஸ்வரி B.A
எஸ். சஞ்சீவன் B.A
அ.கஜன் B.A
V.புவனேந்திரராஜ் B.A
B.A
கோ.செந்தில்மதி B.A
எஸ். மாவிரதன் B.A
ரஞ்சித் B.A



செல்வி ரதனி செல்லையா (B.A)
செல்வி. சந்திரவதனி புஸ்பராஜா (B.A)
திருமதி ஜீவவதனி சாந்தகுமார் (B.A)
திருமதி நந்திகா கந்ததாசன் (B.A)
திரு சிவஞானசிங்கம் சுகந்தன் (B.A)
திரு கார்த்திகேசு கஜேந்திரன் (B.A)
செல்வி சுபாஜினி சிவசுந்தரலிங்கம் (B.A)
செல்வி கார்த்திகா மாணிக்கவாசகர் (B.A)



சி.சிவரசனி சிவபாலன் B.A
திருமதி ஷாமினி ஞானதேவன் B.A
கே. நாதன் B.A
செல்வன் ஞானசேகரம் ஜயந்தன் (B.A)
திரு பாலசுப்பிரமணியம் ரமேஷ்கண்ணா (B.A)
திருமதி சீதாஜினி தவக்குமார் (B.A)
செல்வி சுவேனியா சுப்பிரமணியம் (B.A)
செல்வி சிவரதி சிவராசா (B.COM)



திருமதி புஜின்பத்மினி ஜஸ்ரின்மேரி (B.A)
செல்வி ஏரம்பமூர்த்தி தேவகி (B.A)
திருமதி பிரித்விராஜ் தேவரஞ்சினி (B.A)

**புகைப்படம் கிடைக்காதவர்கள்**


**யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர் ஒன்றியம்**

**இந்நிகழ்வை சிறப்புற ஒழுங்கமைத்த துணைவேந்தர் வெளிவாரி கற்கைகள் இணைப்பாளர் உதவிப் பதிவாளர் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மீசைக்காரன் செய்த கலாட்டா



**கோ**யிலில் இருந்து திரும்பிய கமலா வீட்டினுள் நுழைந்ததும், தன் வீட்டிற்கு யாரோ இரு விருந்தாளிகள் வந்திருப்பதைக் கண்டாள். அவர்கள் அவளுடைய தந்தையுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்குக் கமலாவை அறிமுகம் செய்து வைத்தார் அவள் தந்தை! அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுக் கமலா உள்ளே சென்று விட்டாள்.

சிறிது நேரங்கழித்து அவள் தந்தை அவளிடம் வந்து, "கமலா! அந்தப் பிள்ளை ரவி உன்னை ஒரு திருமணத்தில் பார்த்தானாம். அவனுக்கு உன்னைப் பிடித்து இருக்கிறதாம் அதனால் பெண் கேட்பதற்காக தன் தந்தையுடன் வந்திருக்கிறான், இந்த வரன் அமைந்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஆனால், பிள்ளையின் அப்பா பத்தாயிரம் ரூபாய் பணத்தை வரதட்சிணையாகக் கேட்கிறார்?" என்றார்.

பார்ப்பதற்கு அழகாக இருந்த ரவியைத் திருமணம் செய்து கொள்வதை நினைத்தவுடனே மிகவும் மகிழ்ந்த கமலா வரதட்சிணை விடயத்தைக் கேட்டு மனமொடிந்து போனாள். அவளுடைய தந்தை வந்தவர்களிடம் யோசித்துச் சொல்வதாகக் கூறி அவர்களை வாயில் வரை சென்று வழி அனுப்பினார்.

அவர்கள் சென்றதும் வீட்டிற்குள் திரும்பி வந்த கமலாவின் தந்தை. "கமலா! உனக்குப் பிள்ளையைப் பிடித்து இருக்கிறது என்று உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது.

அதனால் நான் சம்மதம் என்று சொல்லி விட்டேன்!" என்றார் "ஐயையோ! வரதட்சிணைக்கு என்ன செய்வீர்கள், அப்பா?" என்று கவலையுடன் கமலா கேட்க, 'அதைப்பற்றி கவலைப்படாதே! நான் எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன்!" என்று அவர் சொல்லி விட்டார். உடனே, திருமணத் திகதி குறிக்கப்பட்டு, திருமணத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கத் தொடங்கின.

வரதட்சிணைப் பணத்தை எப்படியோ ஏற்பாடு செய்து விட்டதாக கமலாவின் தந்தை கூறினார். திருமண தினமும் வந்தது. உறவினர்களும், நண்பர்களும் கூடிவிட்டனர். மணப்பெண்ணிற்கு அலங்காரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது, மிகவும் பருமனான ஒரு ஆள் மணப்பெண் தங்கியிருந்த வீட்டில் நுழைந்தார்.

"நான் ரவியின் பெரியப்பா! ரவி மணக்கப் போகும் பெண்ணை நான் பார்க்க விரும்புகிறேன்!" என்றார். நீளமான தலைமுடியும், அரிவாள் மீசையும் கொண்ட அவரைப் பார்ப்பதற்கு நாடக வேடதாரி போல் இருந்தாலும், மாப்பிள்ளையின் பெரியப்பா என்பதால் அவரை வரவேற்ற கமலாவின் தந்தை, தன் மகளை அறிமுகப்படுத்தினார்.

பிறகு அந்த அரிவாள் மீசைக்காரர் நேராக மாப்பிள்ளை தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கு சென்று ரவியின் தந்தையை சந்தித்து, "நான் கமலாவின் மாமா! மாப்பிள்ளையைச் சிறிது பார்க்கலாமா?" என்றதும், ரவியின் அப்பாவும் தன் பிள்ளையை அறிமுகப்படுத்தினார்.

முகூர்த்த நேரம் நெருங்கியதும் அப்போது திடீரென ரவியின் தந்தையைத் தனியே அழைத்த மீசைக்காரர், "உங்களிடம் வரதட்சிணையைப் பற்றி பேச வேண்டியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?" என்று கிசுகிசுக்க, ரவியின் தந்தை அவரைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

"உங்களிடம் வரதட்சிணைப் பணத்தை..." என்று தொடங்கிய அந்த மீசைக்காரர் திடீரென



பயங்கரமாக இருமத் தொடங்கினார். "தண்ணீர்... தண்ணீர் கொண்டு வாருங்கள்!" என்று திணறிக் கொண்டே அவர் கூற, ரவயின் தந்தை தண்ணீர் எடுதது வர வெளியேறினார்.

தண்ணீர் எ்டுத்து வந்ததும், அதை அருந்திய மீசைக்காரர், "உங்களிடம் இப்போதே வரதட்சிணைப் பணத்தைத் தந்து விடலாமா என்று என் மைத்துனன் கேட்டான்" என்று சொல்ல, ரவியின் தந்தை சம்மதித்தார்.

உடனே, கமலாவின் தந்தையிடம் சென்ற மீசைக்காரர், "உங்களிடம் ரகசியமாகப் பேச வேண்டியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?" என்று கேட்க, இருவரும் அறைக்குள் நுழைந்தனர்.......

(தொடரும்)




- 1124 - முதலாம் டேவிட் ஸ்கொட்லாந்து மன்னனானான்.
- 1296 - இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னன் டன்பார் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஸ்கொட்லாந்தரைத் தோற்கடித்தான்.
- 1521 - நாடுகாண் பயணி பேர்டினண்ட் மகலன் பிலிபீன்சில் பழங்குடியினரால் கொல்லப்பட்டார்.
- 1522 - மிலான் நகரைக் கைப்பற்ற இடம்பெற்ற போரில பிரெஞ் மற்றும் சுவிட்சர்லாந்துப் படையினரை ஸ்பானியப் படையினர் தோற்கடித்தனர்.
- 1565 - பிலிப்பைன்சின் முதலாவது ஸ்பானியக் குடியேற்ற நாடு சேபு (Cebu) அமைக்கப்பட்டது.
- 1667 - குருடரான ஜோன் மில்ட்டன் தான் எழுதிய பரடைஸ் லொஸ்ட் என்ற காவியத்தின் காப்புரிமையை +10க்கு விற்றார்.
- 1813 - 1812 போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் ஒண்டாரியோவின் தலைநகர் யோர்க்கை கைப்பற்றினர்.
- 1840 - லண்டனில் புதிய வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் அடிக்கல் நாட்டப்பட்டது.
- 1904 - அவுஸ்திரேலியாவின் முதலாவது தேசிய அரசை அவுஸ்திரேலியத் தொழிற் கட்சி அமைத்தது.
- 1909 - துருக்கியின் சுல்த்தான் இரண்டாம் அப்துல் ஹமீட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவனது சகோதரன் ஐந்தாம் மெஹ்மெட் ஆட்சிக்கு வந்தான்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸ் நகரை அடைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: கடைசி நாசி ஜேர்மன் படைகள் பின்லாந்தில் இருந்து வெளியேறினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசிக் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான வோல்கிஷெர் பியோபாக்டர் நிறுத்தப்பட்டது.
- 1959 - மக்கள் சீனக் குடியரசில் இருந்து கடைசி கனேடிய மதபரப்புனர் வெளியேறினர்.
- 1960 - பிரெஞ் நிர்வாகத்தின் கீழ் ஐ.நாவின் நேரடி ஆட்சியின் கீழிருந்த டோகோ விடுதலை அடைந்தது.
- 1961 - சியேரா லியோனி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1967 - கனடாவின் மொன்ட்ரியால் நகரில் எக்ஸோ 67 கண்காட்சி ஆரம்பமானது.
- 1974 - அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனுக்கெதிராக வோஷிங்டன் டிசியில் 10,000ற்கு மேற்பட டோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றனர்.
- 1981 - Xerox PARC முதன் முறையாக கணனி mouse I அறிமுகப்படுத்தியது.
- 1992 - சேர்பியா மற்றும் மொண்டெனேகிரோவை உள்ளடக்கிய யூகொஸ்லாவிய கூட்டுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1993 - காபோனில் இடம்பெற்ற விமான விபத்தில் காம்பியாவின் தேசிய காற்பந்தாட்ட அணியினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.
- 1994 - தென்னாபிரிக்காவில் முதற்தடவையாக கறுப்பினத்தவரும் வாக்களித்த மக்களாட்சி முறையிலான தேர்தல் இடம்பெற்றது.
- 2002 - நாசாவின் பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தடவையாக தொடர்புகள் கிடைத்தது.
- 2007 - எஸ்தோனியாவின் தலைநகர் தாலின் நகரில் இருந்த சோவியத்தின் செம்படையின் நினைவுச் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

**பிறப்புகள்**

- 1723 - பிலிப்பு தெ மெல்லோ, கொழும்பில் பிறந்த கிறிஸ்தவத் தமிழ் அறிஞர் (இ. 1790)
- 1852 - சர் பி. தியாகராய செட்டி, திராவிட அரசியல் தலைவர் (இ. 1925)
- 1902 - கந்தமுருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (இ. 1965)
- 1942 - வலேரி பொல்யாக்கொவ், ரஷ்ய விண்வெளி வீரர்
- 1945 - பிரபஞ்சன், தமிழ் எழுத்தாளர், விமர்சகர்

**இறப்புகள்**

- 1521 - பெர்டினென்ட் மகலன், போர்த்துக்கேய மாலுமி (பி. 1480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தமானி அறிவித்தல் கைதுக்கான உத்தரவல்ல



## இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

**16 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் 424 புலம்பெயர் தமிழர்களின் பெயர் விபரங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பட்டியலிடப்பட்டமையானது அவர்களை கைது செய்வதற்கான அறிவித்தலோ அல்லது தடை உத்தரவோ கிடையாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.**

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

16 புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் 424 தமிழர்கள் தொடர்பான வர்த்தமானி பிரசுரம் தொடர்பில் பலரும் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும், அது தொடர்பான தெளிவின்மையே அதற்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தாக்குதலை தொடர்ந்து 1373, 1267ஆம் இலக்கம் கொண்ட இரு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

அதில் ஒன்று தலிபான் மற்றும் அல்கொய்தா அமைப்புக்களை தடை செய்வதாகவும் அதனுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் அமைப்புக்களை இனம் கண்டு அவற்றுக்கு எதிராக செயற்படுவதாகவும் அமைந்துள்ளன.

இரண்டாவது தேசிய மட்டங்களில் செயற்படும் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய அமைப்புக்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் பட்டியலிட்டு செயற்படுவதாகும். இது 1373 ஆம் இலக்க பிரேரணை.

இந்த இரு நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டிலும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு அவை அமுல் செய்யப்பட்டு வருகின்றன.

1267ஆம் இலக்க பிரேரணை தொடர்பில் இலங்கை பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண செயற்படுகின்றார்.

1373 ஆம் இலக்கம் கொண்ட பிரேரணை தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ செயற்படுகின்றார்.

இந் நிலையிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் குறித்த பிரேரணைக்கமைய பாதுகாப்பு செயலாளரினால் 16 அமைப்புக்களும் 424 நபர்களும் பட்டியல்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் குறித்த பிரதிநிதிகளை அணுகுவதன் ஊடாக தாம் நிரபராதிகள் எனில் அதற்கான ஆதாரங்களை முன்வைத்து பட்டியலில் இருந்து தமது பெயரை நீக்கிக் கொள்ள முடியும்.

அவர்கள் நிரபராதிகள் எனில் அதற்கான ஆதாரங்களை, அந் நாட்டில் உள்ள பிரதிநிதிகள் பரீட்சித்து எமக்கு அது தொடர்பில் அறிவிப்பர்.

அப்போது அவர்களின் பெயர் பட்டியலில் இருந்து நீக்குவது தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

எனினும் இதுவரை இலங்கை தடை செய்த 16 புலம்பெயர் அமைப்புக்களும் 424 நபர்களிலும் எவரும் இதுவரை தம்மை விடுவித்துக்கொள்ள முன்வரவில்லை என குறிப்பிட்டார். (2)



சாவகச்சேரி பூவேந்தன் முன்பள்ளி நிலையத்தின் முன்பள்ளி சிறார்களினால் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது முன்பள்ளி நிலைய நிறுவுனர் கு.மகாலிங்கம் தலைமையில் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்ற போது... (படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் பின் நிற்பதில்லை

## ஞானேஸ்வர தேரரிடம் கூறினார் ஹக்கீம்

(கொழும்பு)

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமரபுர நிக்காயாவின் மகாநாயகத் தேரர் வண. அக்க மஹா பண்டித தவுல்தென ஞானேஸ்வர தேரை சந்தித்துள்ளார்.

நுகேகொடை, பாகொடை வீதியிலுள்ள தேரரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் தாம் எப்போதும் பின் நிற்பதில்லை என்றும், அண்மைக்காலமாக குறிப்பாக முஸ்லிம்கள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அடிப்படை இல்லாத விடயங்கள் திணிக்கப்படுவதாகவும அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனின் அமைச்சை முற்றுகையிட்டு நடந்து கொண்ட முறைகள் நாகரிகமற்ற செயல் என்றும் அமைச்சர் அவ்வாறு அவரை பாதுகாத்து ஒளித்து வைத்திருக்க மாட்டார் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

அப்படி ஒரு பௌத்த மத குரு தனது உயிர்ப் பயம் காரணமாக தஞ்சம் புகுந்தால் அபயமளிப்பது மனிதாபிமான அடிப்படையில் தவறு இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த மகாநாயக்கத் தேரர், சிங்கள மக்கள் நீண்டகாலமாக முஸ்லிம்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளதாகவும் தான் திருக்குர் ஆனின் சிங்கள மொழி பெயர்ப்பு ஒன்றை அடிக்கடி வாசித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# சம்பளம் அதிகரிக்காவிடின் பணிப்புறக்கணிப்பு போராட்டம்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படாது போனால் மாபெரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பிக்க போவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அறிவித்துள்ளார்.

இடதுசாரி கட்சிகளின் மே தினக் கூட்டம் தொடர்பில் கொழும்பில் ஊடகங்க்ளுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் சகல கொடுப்பனவுகளுடன் 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாட் சம்பளம் 800 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

இதனை தவிர ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவு வெட்டப்படக் கூடாது.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இல்லாவிட்டால், கோரிக்கைகளை வென்றெடுக்க மாபெரும் பணிப்புறக்கணிப்புக்கு அழைப்பு விடுக்கப்படும்.

நாங்கள் அரசாங்கத்தை கவிழ்க்கவோ, அரசாங்கத்திற்கு எதிராக சூழ்ச்சிகளை செய்யுவோ போவதில்லை.

அரசாங்கத்தின் கூட்டணி கட்சியினர் என்ற வகையில் இந்த அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது எமது கடமை.

உழைக்கும் மக்களின் கோரிக்கைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

எமது கோரிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளோம் எனவும் அமைச்சர் நாணயக்கார மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# வாரம் ஒரு தகவல்

## பேசுவது தவறா?

"டாக்டர்... உங்களிடம் ஒரு முக்கியமான சந்தேகம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று வந்திருக்கிறேன்"

"சொல்லுங்க?"

"சில பேர் தனியாகப் பேசுகிறார்களே... அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"தனக்குத் தானே பேசிக் கொள்ளும் பழக்கம் ஒருவிதமான மன நோய்"

"அப்படியா?"

"ஆமாம், மனதிற்குள் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் விருப்பு,வெறுப்பு, கோபம்,எரிச்சல் அல்லது வேறு ஏதாவது பிரச்சினைகள் அளவுக்கு மீறிப் போய்விட்டால் அது மனவருத்த நோயில் கொண்டு போய் விட்டு விடும். அதற்குப் பெயர் "Depressive Disorder"

"இப்படி ஒரு நிலைமை உண்டானதற்குப் பின்னர் அவர்கள் தனியாக இருந்து பேச ஆரம்பித்து விடுகிறார்களா?"

"ஆமாம். அது மாதிரி உள்ள சமயங்களில் மனத்திலுள்ள பிரச்சினைகளுக்கு ஒரு வடிகால் தேவைப்படுகிறது. என்ன செய்யலாம் என்று மனம் யோசிக்கிறது.அப்பொழுது ஏற்படக்கூடிய ஒருவகையான வெளிப்பாடு தான் தனக்குத்தானே பேசிக்கொள்வது"

"பாருங்கள் டாக்டர். இப்பொழுது இதைப்பற்றி இவ்வளவு தெளிவாக சொல்கிறீர்கள். இது என் மனைவிக்குப் புரியவில்லையே"

"ஏன்"

"எனக்கு அந்த வியாதி இருப்பதாகச் சொல்லி இப்பொழுது உங்களிடம் அனுப்பி வைத்திருக்கிறாள்"

நீங்கள் எதிரில் யாரும் இல்லாத போது தனியாகப் பேச ஆரம்பிப்பீர்களா?"

"அப்படிச் செய்யவே மாட்டேன்... எதிரில் யாரையாவது பார்த்தால் தான் பேச ஆரம்பிப்பேன். குறைந்த பட்சம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியாவது எனக்கு வேண்டும்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணி பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்

## பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் முடிவு



(குருமன்காடு)

நெடுங்கேணி பிரதேசத்தில் இடம் பெற்று வரும் காடழிப்பு, கல்வி நிலைமைகள், பிரதேச வைத்தியசாலையின் பற்றாக்குறை, வன பரிபாலன திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் அத்துமீறிய நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் ஆரா யப்பட்டுள்ளது.

நெடுங்கேணி பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தலைவர் ஹுனைஸ் பாரூக் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, நைனாமடு பிரதேசத்தில் பண்ணையொன்றை அமைப்பதற்காக நிறுவனமொன்றிற்கு 500 ஏக்கர் காணி வழங்கப்பட்டு அங்கு காடழிப்பு இடம்பெற்று வருகின்றது.

எனினும் குறித்த நிறுவனம் தொடர்பான விபரங்கள் எதுவுமில்லாத நிலையில் காடழிப்பு இடம்பெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என சுட்டிக்காட்டப்பட்டது. இவ் விடயம் தொடர்பில் விசா ரணை மேற்கொண்டு பிரதேச செயலாளர் அறிக்கை சமர்ப்பிக்கும் வரை காடழிப்பு தற்காலிகமாக நிறுத்தப்படுமென தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் சின்னடம்பன் பிரதேசத்தில் 200 ஏக்கர் காணிகள் அழிக்கப்பட்டு மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுகின்றது என்ற விடயத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

அத்தோடு மீள்குடியேறிய குடும்பமொன்று வீடு கட்டுவதற்கு மணலை பெற்றுக்கொள்ள நெடுங்கேணி பிரதேச செயலரினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தை வன பரிபாலனதிணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கிழித்தெறிந்த சம்பவம் தொடர்பாகவும் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

அதேநேரம் ஒலுமடு, பட்டிக் குடியிருப்பு போன்ற இடங்களில் பிரதேச செயலரிடம் அனுமதி பெற்று தங்களுடைய காணிகளிலிருந்த மரங்களை வெட்டி உருவாக்கிய கதவு, யன்னல் போன்ற தளபாடங்களை பொலிஸார் கைப்பற்றியமை தொடர்பான முறைப்பாடொன்றும் முன் வைக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.

நெடுங்கேணி பிரதேச வைத்திய சாலையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை, நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி எடுத்துரைக்கப் பட்டன.

இதனையடுத்து நெடுங்கேணி பிரதேச மக்களின் வைத்திய தேவைகளை கருத்திற் கொண்டு வைத்திய சாலையை ஏ தரத்திற்கு உயர்த்துவதாகவும் வைத்திய சேவைகளை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

நெடுங்கேணி பிரதேசத்தின் கல்வி மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளதாகவும் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கும் ஆரம்பக் கல்வி பிரிவிற்கும் போதிய ஆசிரியர்கள் இல்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

அத்தோடு நெடுங்கேணி மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருப்பதனால் ஆரம்பப் பிரிவொன்றை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக எதிரிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தின் காணியை அங்கு முகாமிட்டுள்ள இராணுவத்தினரிடமிருந்து பெற்றுக் கொள்வது பற்றியும் ஆராயப்பட்டது.

இந்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தக் காணியை பெறுவதற்கு முறையான அனுமதியை பெற சுகாதாரத் திணைக்களத்திற்கு எழுத்து மூலமாக அனுப்ப வேண்டும் என்று வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அபிவிருத்திக் குழுவின் தலைவர் ஹுனைஸ் பாருக் உத்தரவிட்டார்.

அதேநேரம் நெடுங்கேணி பிரதேசத்தின் கல்வி நிலைமைகள், பாடசாலைகளின் தேவைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவான தகவல்களைத் தரவேண்டும் என்றும் அவர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது குறி த்து வடமாகாண கல்வி அமைச்சருடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (9-250)





### சுகத்தை தேடிய பயணம் நூல் அறிமுக விழா

(கிளிநொச்சி)

காவேரி கலா மன்றத்தினரால் சுகத்தை தேடிய பயணம் எனும் நூலின் அறிமுக விழா எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கிளி. மத்திய கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற வுள்ளது.

காவேரி கலா மன்றத்தின் இயக்குநர் வண.ரி.எஸ்.யோசுவா தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக எஸ்.டி.எஸ் நிறுவனத்தின் திட்ட முகா மையாளர் மார்டின் ஸ்ரடர் கலந்து கொள் வார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி பாரதி வித்தியாலய அதிபர் பெருமாள்கணேஸ், விவசாய மருத்துவ சமூகவியல் பேராசிரியர் நித்தி கனகரட்ணம், எஸ்.டி.எஸ். நிறுவன திட்ட இணைப்பாளர் திருமதி தர்சினி மகேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (9)



வவுனியா தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் கருத்தாடல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா தமிழ்ச்சங்கத் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன் தலைமையுரை ஆற்றுவதையும் கருத்தாடல் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# பாரதிநகர் மதுபானசாலையை விரைவில் இடமாற்றுக

(மல்லாவி)

மல்லாவி பாரதி நகர் மக்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள மதுபான சாலையில் மதுப்பிரியர் களால் மேற்கொள்ளப்படும் அட்டகாசத்தி னால் போக்குவரத்துச் செய்பவர்களும் குடியி ருப்பாளர்களும் பல்வேறு அசௌகரிய்ங் களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம்மதுபான சாலையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இரு தரப்புக் களுக்கிடையில் மோதலொன்று இடம் பெற்றது.

இதனால்,மல்லாவி-பாண்டியன் குளம் பிரதான போக்குவரத்துப்பாதை சிலமணிநேரம் தடைப்பட்டிருந் தது.

இம்மோதல் அன்றைய தினம் மாலை 4 மணி முதல் இரவு 7.30 வரை இடம்பெற்றது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த மல்லாவி பொலிஸார் மோதலை நிறுத்திய தோடு சிலரை கைது செய்துள்ளனர்.

இம்மதுபானசாலையை இவ்விடத்திலி ருந்து அகற்றுமாறு வலியுறுத்தி 194 குடும்பங்கள் கையொப்பமிட்ட மகஜர் வடமாகாண முதலமைச்சர் முல்லை. மாவட்ட அர சாங்க அதிபர் உட்பட்ட பலருக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் மதுபானசாலை அகற்றப்படாமையினால் பெண்கள் பாடசாலை மாணவர்கள் வீதியால் பயணிப்போர் குடியிருப்பாளர்கள் பல்வேறு நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

எனவேகுறித்தமதுபானசாலையை வேறிடத்திற்கு மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-15)

# துணுக்காய் பி.செயலர் பிரிவில் ஆயிரத்து 142 வீடுகள் தேவை

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீள்குடியேறியுள்ள 3 ஆயிரத்து 630 குடும்பங்களில் இன்னும் ஆயிரத்து 142 குடும்பங்கள் வீட்டுத்திட்டத்தில் உள் வாங்கப்படவில்லையென மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லை.மாவட்ட அரச செயலக புள்ளி விபரத்தின் படி, கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 630 குடும்பங்களைச் சேர்ந்த 11ஆயிரத்து 335 அங்கத்தவர்கள் மீள்குடியேற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கான புதிய வீடுகளில் அரச மற்றும் அரச சார்பற்ற பொது அமைப்புக் களால் 556 வீடுகளும், இந்தியன் வீட்டுத் திட்டம் மூலம் இதுவரை ஆயிரத்து 139 வீடுக ளுமாக மொத்தம் ஆயிரத்து 695 வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

அத்தோடு, யுத்தத்தினால் சேதமடைந்த 460 வீடுகளும் புனரமைக் கப்பட்டுள்ளன.

இவற்றை விட தற்போது இந்தியன் வீட்டுத் திட்டத்தி னூடாக 333 வீடுகளுக்குரிய பய னாளிகள் விபரம் திரட்டப்பட்டு வீடு கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மொத்தமாக 2 ஆயிரத்து 488 குடும்பங்களுக் குரிய வீட்டுத்தேவை பூர்த்தி செய்யப் பட்டுள்ளது.

எனினும் மிகுதியாக வுள்ள ஆயிரத்து 142 குடும்பங்களில் 630 குடும்பங்கள், 18 வயதிற்கும் 65 வயதிற்கும் இடைப்பட்ட புள்ளித்திட்டங் களுக்குள் உள்வாங்கப்படாத பல அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களும் அரச உத்தியோகத்திலுள்ள குடும்பங்களும் உள்ளடங்குகின்றன.

மிகுதியாகவுள்ள 512 குடும்பங்களில் போரினால் பிள்ளைகளை, கணவனை, மனை வியை இழந்தவர்கள் உள்ளடங்கலாக ஒரு அங்க த்தவர்கள் மற்றும் இரு அங்கத்தவர் களை உள்ளடக்கிய குடும்பங்களாகும்.

இவர்களில் பலர் போரினால் தொழில் வாய்ப்புக் களை இழந்தும், மாற்றுத்திறனாளிகளாகவும் காணப் படுகின்றனர்.

எனவே, போரினால் பாதிக்கப்பட்டு வீட்டுத் திட்டத்திற்குள் உள்வாங் கப்படாமலுள்ள ஆயிரத்து 142 குடும்பங்களுக்குரிய வீட்டுத் திட்டத்தை மிக விரைவில் பெற்றுக் கொடுக்க அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும். (9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை சீர்குலைக்க பல்வேறு தரப்பினர் முயற்சி

## ஜனாதிபதி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த சில நாடுகளில் இன்னமும் பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நமக்காக நாம் திட்டத்தின் கீழ் படை வீரர்களுக்கு வீடுகளை வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 30 ஆண்டுகள் நீடித்த போரை சுலபமாக முடிவுக்குக் கொண்டு வர முடியாது.

மக்கள் இன்று சுதந்திரக் காற்றை சுவா சிப்பதற்கு அழுத்தங்களுக்கு அடிபணியாத தலைமைத்துவமே காரணம்.

நாம் எட்டியுள்ள சமாதானத்தை சீர்குலை ப்பதற்கு பல்வேறு தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

போர் நிறைவின் பின்னர் நாடு பாரியளவில பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (2)

# பொதுபல சேனாவின் கோரிக்கை நியாயமற்றது-மன்னார் ஆயர்

(கொழும்பு)

மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர்கள் இருவரும் தேசத்துரோகக் குற்றங்களைப் புரிந்திருப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ள பொதுபல சேனா அமைப்பு, அவர்கள் இருவரையும் கைது செய்ய வேண்டும் என்று கோரி, பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்திருக்கின்றது.

இது குறித்து கருத்து வெளியிட்ட மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை,

அவர்களுடைய கூற்று அர்த்தமற்ற கூற்று என்று நிராகரித்திருக்கின்றார். பொதுபலசேனா எல்லா விடயங்களிலும் தலையிட்டுக் கொண்டிருக்கின்றாது.

நாடு என்று சொன்னால், அது மக்களுக்கு, நாட்டு பிரஜைகள் அனைவருக்கும் சொந்தமானது.

அதைவிடுத்து, சிங்களம் பேசுபவர்களுக்கு மாத்திரம்தான் அது சொந்தம், பௌத்தர்களுக்குத்தான் அது இன்னும் கூட சொந்தம் என்று சொல்லிக் கொண்டிருப்பதெல்லாம் மனிதத் தன்மைக்கு ஒவ்வாத காரியமாகும் என அவர் பிபிசி தமிழோசையிடம் கூறினார்.

தங்களைப் பொறுத்த வரையில் தாங்கள் மக்களுக்குத் தலைவர்களாக இருப்பதுடன், கத்தோலிக்க சமயத்தில் சமயம் வேறு, சமூகம் வேறு என்று பார்ப்பதில்லை என்றும் அவர் கூறினார்.

அரசியல் என்பது மக்களுடைய வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருக்கின்றது.

எனவே அரசியலில் மக்களுக்கு சரியான தீர்மானங் களை எடுப்பதற்கு வழிகாட்ட வேண்டியது தமது கடமையென்றும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் நாங்கள் பொது அரசியலில் ஈடுபடுவோமே தவிர, கட்சி அரசியலில் ஈடுபடுவதில்லை. ஈடுபடவும் மாட்டோம். சமயம் சமூகம் என்ற வகையில் நாங்கள் எங்களுடைய பணிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (2)

## கும்பாபிஷேகம்

(கொடிகாமம்)

தென்மராட்சி கொடிகாமம் பதியுறை திருவருள் மிகு எருவன் பிள்ளையார் திருக்கோவில் நூதன பிரதிஷ்டா அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி திருவிழா எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இம் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவானது ஆலய பிரதிஷ்டாபிரதம குரு சிவசிறி பால கிருஷ்ண குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இதற்கமைய மே மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளதாக ஆலய பிரதம குரு சிவத்திரு ந.மணிகண்ட ராஜா அறிவித்துள்ளார். (2-272)

# பிரிவுத்துயர் பகிர்வு



### பிரான்சிப்பிள்ளை கனகரட்ணம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Ottawa ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிப்பிள்ளை கனகரட்ணம் (ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்) கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பொன்னையா செல்லக்கண்டு

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லக்கண்டு கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி கனகரட்ணம்

கிளிநொச்சி பூநகரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகரட்ணம் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு St.John's Norway Cemetery & Crematorium, 256 Kingston Rd, Toronto, ON M4L 1S7, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### குகசிங்கம் சானுஜா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குகசிங்கம் சானுஜா கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு St.John's Dixie Cemetery, 737 Dundus Street East, Mississauga, L4Y 2B5, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி பாஸ்கரதாஸ் ஜெயலட்சுமி

மியன்மார் ரங்கூனைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Hamm ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரதாஸ் ஜெயலட்சுமி கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Lunener StraBe 59077, Herringen, Hamm, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி குணராசா அன்னம்

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணராசா அன்னம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் இன்று அச்சுவேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி விஜயசிங்கம் தயாமணி

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயசிங்கம் தயாமணி (முன்னாள் காரைநகர் ப.நோ.கூ.ச. உள்ளக கணக்காய்வாளர்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி தம்பையா தையலம்மை

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தையலம்மை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவராஜா லீலாவதி

சங்கிலியன் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட சிவராஜா லீலாவதி கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி நல்லதம்பி தங்கச்சியம்மா

துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தங்கச்சியம்மா கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் தனித்து பேச்சுவார்த்தை நடத்த முடியாது

## அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

**தேசிய பிரச்சினைக்கான தீர்வு விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் தனித்து பேச்சுவார்த்தை நடத்த முடியாது. இதனை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். அனைத்துக் கட்சிகளும் உள்ளடங்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும் வந்தால் மட்டுமே பேச்சு நடத்தலாம் என்று நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

தேசிய பிரச்சினைக்கான தீர்வு விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராக செயற்படும் அவரிடம் தென்னாபிரிக்க அணுகுமுறைகள் குறித்து வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளில் தென்னாபிரிக்காவின் ஒத்துழைப்பை ஆரோக்கியமாகவே நாங்கள் பார்க்கின்றோம். [illegible] கட்சி தென்னாபிரிக்கா [illegible] போது கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு கொண்டுவர உதவுமாறு கோரியிருந்தோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தீர்வு செயற்பாடு என்று வரும்போது பாராளுமன்றத் தெரிவுக் குழுவே [illegible] எனத் [illegible] அமைச்சர் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு எந்த நேரத்தில் வந்தாலும் அவர்களை இணைத்துக்கொண்டு தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை முன் கொண்டு செல்ல தயாராகவே இருக்கின்றோம்.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வு என்று வரும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்தனித்துபேச்சுவார்த்தை நடத்த முடியாது. இரண்டு தரப்புக்கள் பேச்சு நடத்தி அதனை வெற்றி பெற செய்ய முடியாது. தேசிய விவகாரங்கள் தொடர்பில் அனைத்துக் கட்சிகளும் அமர்ந்து பேச்சு நடத்த வேண்டும்.

இதேவேளை இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளில் தென்னாபிரிக்காவின் ஒத்துழைப்பை ஆரோக்கியமாகவே நாங்கள் பார்க்கின்றோம. நாமும் தென்னாபிரிவுக்காவுக்கு சென்று வந்தோம். ஆளும் கட்சி தென்னாபிரிககா சென்றிருந்த போது கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு கொண்டு வர உதவுமாறு கோரியிருந்தோம். எனவே இந்த விடயத்தில் தென்னாபிரிக்காவின் ஒத்துழைப்பு சிறப்பானதாக அமையும் என்றார்.

இது இவ்வாறு இருக்க அண்மையில் தென்னாபிரிக்கா சென்று வந்த சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தென்னாபிரிக்க விஜயம் திருப்திகரமாக அமைந்துள்ளதாக கூறியிருந்தமை குறித்து வினவியதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தென்னாபிரிக்கா சென்று வந்துள்ளனர். விஜயம் திருப்திகரமாக இருந்ததா என்று எமக்கு தெரியாது. அவர்கள் எதுவும் எம்மிடம் கூறவில்லை.

ஆனால் எமது விஜயத்தின் போது நாம் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து விரிவாக கலந்துரையாடினோம் என்று தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஷாரப் மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு



தன் மீது தொடரப்பட்டுள்ள தேச துரோக வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கைகளைக் கோரி பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தாக்கல் செய்த வழ்க்கின் தீர்ப்பை பாகிஸ்தான் நீதிமன்றம் இம்மாதம் 28 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

முஷாரப்பின் மனுவை விசாரித்த சிந்து உயர் நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு மேற்கண்ட உத்தரவை கடந்த வெள்ளிக்கிழமை பிறப்பித்தது.

முன்னதாக முஷாரப் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் பரூக் நாஸிம், இந்த வழக்கின் விசாரணை நேர்மையான முறையில் நடத்தப்பட வேண்டும்.

இல்லையென்றால் இந்த வழக்கை நடத்தவே கூடாது.

இந்த வழக்கு தொடர்பாக பாகிஸ்தானின் தன்னிச்சையான விசாரணை அமைப்பு நடத்திய விசாரணை அறிக்கை உட்பட அனைத்து விதமான அறிக்கைகளையும் எங்களிடம் அளிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

## தலாய் லாமாவை சந்திக்க நோர்வே அதிகாரிகள் மறுப்பு

(நோர்வே)

அடுத்த மாதம் 7 ஆம் திகதி நோர்வே நாட்டுக்கு செல்லவுள்ள திபெத்திய புத்த துறவி தலாய் லாமாவை, அரச அதிகாரிகள் யாரும் சந்திக்கப் போவதில்லை என அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தலாய் லாமா தனது நாட்டில் பிரிவினையைத் தூண்டி வருவதாக சீனா குற்றம் சாட்டி வரும் நிலையில், அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்குவதாக நோர்வே நாட்டிலுள்ள நோபல் குழு 2010 ஆம் ஆண்டு அறிவித்தது.

அதனையடுத்து அந்நாட்டுடன் தனது தூதரக உறவை சீனா முறித்துக்கொண்டது.

எனினும், சமீபத்தில் இவ்விரு நாடுகளும் மீண்டும் தூதரக உறவை ஏற்படுத்தியுள்ள நிலையில், சீனாவின் நெருக்கடியை ஏற்று தலாய் லாமாவுடன அதிகாரபூர்வ சந்திப்பை நோர்வே தவிர்த்துள்ளதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## நேபாளத்தில் நிலச்சரிவு; 16 பணியாளர்கள் தவிப்பு

(காத்மாண்டு)

நேபாளத்தில் புனல் மின் நிலையம் அமைப்பதற்கான சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 16 பேர் சிக்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் காத்மாண்டுவிலிருந்து 125 கி.மீ. தொலைவில் இந்த புனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

சுரங்கத்துக்குள் சிக்கியுள்ளவர்களில் இரண்டு சீன தொழில்நுட்ப வல்லுநர்களும் அடங்குவர்.

அவர்களை மீட்பதற்காக அந்தப் பகுதியில் மீட்புக் குழுவினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நேபாள பொலிஸாரும் இராணுவமும், சரிந்த மணல்பரப்பில் துளைகளை ஏற்படுத்தி உள்ளே சிக்கியுள்ளவர்களுக்கு குடிநீர் வழங்கி வருகிறது.

சிக்கியுள்ளவர்களில் 13 பேருடன் தொடர்பு கொண்டு பேசியதாகவும், அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர.



யா/வல்வெட்டி இ.த.க. பாடசாலை வரலாற்றில் முதற்தடவையாக தமிழ்த்தின தமிழறிவுப் போட்டியில் கோட்ட மட்டத்தில் பங்கு பற்றி இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டது. அவ் அணியையும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர், அதிபர், தமிழ்ப் பாட ஆசிரியை ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## அமெரிக்க இராணுவம் வெறியேற அரசு உத்தரவு

கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக அமெரிக்க இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெற்றுவந்த ஈக்வடோர் அரசின் அமெரிக்க உறவுகள் தற்போது சுமுகமாக இல்லை.

இதற்கு முன்னரும் கடந்த 2011 ஆம் ஆண்டில் அந்நாட்டின் ஜனாதிபதி ரபேல் கொரியாவிற்கு அமெரிக்காவின் உயர்மட்ட பொலிஸாரின் ஊழல்கள் தெரியும் என்று வெளியான விக்கிலீக்ஸ் தகவல் தொடர்பாக அப்போதைய தூதர் ஹீத்தர் ஹாட்ஜஸ் உட்பட மூன்று உயர் அதிகாரிகளைத் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றினார்.

தொடர்ந்து கடந்த ஜனவரியில் அமெரிக்காவின் 50 இக்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் ஈக்வடோரின் அனைத்து அரசுத் துறைகளிலும் ஊடுருவியுள்ளதாக பகிரங்கமாகக் குறிப்பிட்ட கொரியா அவர்களில் சிலரை வெளியேற்ற இருப்பதாகவும் தெரிவித்தது.

இவர்களில் 20 பேரை தங்களது பணியை நிறுத்துமாறு ஈக்வடோர் அரசு கடந்த 7 ஆம் திகதி உத்தரவிட்டது. தற்போது அவர்கள் அனைவரையும் இந்த மாத இறுதிக்குள் நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிரியாவில் மீண்டும் இராசயன குண்டு வீச்சு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர்அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 3 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

இதுவரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு டமாஸ்கஸ் புறநகர் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் மீது ஜனாதிபதி ஆசாத்தின் இராணுவம் இரசாயன குண்டு வீசி தாக்கியது.

அதில் 650 இக்கும் மேற்பட்டோர் பலியாகினர். இச்சம்பவத்துக்கு கணடனம் தெரிவித்த அமெரிக்கா சிரியா மீது தாக்குதல் நடத்த முடிவு செய்தது.

அதையடுத்து தன்னிடம் உள்ள இரசாயன குண்டுகளை அழிக்க சிரியா ஒப்புக்கொண்டது. அதன்படி ஆயுதுங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் ஜனாதிபதி ஆசாத் இன்னும் தனது கொடூரத்தை நிறுத்தவில்லை. தனது இராணுவம் மூலம மீண்டும் இரசாயன குண்டு தாக்குதலை நடத்தியுள்ளார். வடக்கு மாகாணமான இட்லிப் நகரம் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது.

அதை மீட்க இராணுவம் தீவிரமாக போரிட்டு வருகிறது. கடந்த 2 வாரத்தில் மட்டும் அங்கு 8 தடவை இராசயன குண்டு வீசப்பட்டுள்ளது. அதில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் இட்லிப் அருகேயுள்ள தல் மென்ஸ் கிராமத்தில் ஹெலிகாப்டரில் இருந்து 2 பரல் குளோரின் குண்டுகள் வீசப்பட்டன. அவை வெடித்தவுடன் கிராமம் முழுவதும் குளோரின் காஸ் பரவியது.

அதனால் மூச்சு திணறல் ஏற்பட்டு 70 இக்கும் மேற்பட்டோர் நெஞ்சு எரிச்சல் ஏற்பட்டு மயங்கினர். உடனே அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## பாக். தலிபான் பிரிவுகளிடையே போர் நிறுத்த உடன்படிக்கை

(இஸ்லாமாபாத்)

கடந்த ஏழு வருடங்களாக பாகிஸ்தானில் வன்முறைகளில் ஈடுபட்டுவரும் தலிபான் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்பது தொடர்பான விடயத்தில் அந்த இயக்கத்தினரிடையே இந்த ஆண்டு ஆரம்பத்தில் பிரிவினை தோன்றியது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தான் நாட்டின் தலிபான் இயக்கத்தின் தலைவராக இருந்த மெசூத் சுட்டுக் கொல்லப்பட்டபோது மூத்த தளபதியான கான் சஜ்னா அடுத்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று அவரது ஆதரவாளர்கள் நினைத்தனர்.

ஆனால் இந்த இயக்கத்தின் ஆளும் கட்சிக் குழு இறுதி நேரத்தில் ஆப்கானிஸ்தானில் மறைந்து வாழும் ஸ்வாத் பிரிவினரான முல்லா பஸ்லுல்லாவைத் தலைவராக்கியது.

இதனைத் தொடர்ந்து இந்த மாத ஆரம்பத்தில் கலவரம் நிறைந்த பழங்குடியினர் பகுதியான வடக்கு வரிசிஸ்தானில் சஜ்னாவின் ஆதரவாளர்களுக்கும், இறந்த மெசூத்தின் ஆதரவாளர்களுக்கும் இடையே வன்முறைக் கலவரங்கள் வெடித்தன.

இந்தத் தாக்குதல்களில் 60 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

தொடரும் இந்த வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நேற்றுமுன்தினம் இந்த இரு தரப்பினரிடையேயும் ஆப்கான் தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தளபதி ஒருவரால் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



வடக்கு வரிசிஸ்தானின் மிரான்ஷா பகுதியில் நேற்றுமுன்தினம் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் இந்தப் போர் நிறுத்தம் ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய எமிரேட்டால் மேற்கொள்ளப்பட்டது என்றும் இந்த ஒப்பந்தம் ஓகஸ்ட் 12 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.



ஈராக் தலைநகர் பக்தாத்தில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்பில் 31 பேர் பலியானார்கள். ஈராக்கில் வரும் 30 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடக்க உள்ளது. பக்தாத் அருகே சாடிகுன் தொகுதியில் அசைப் அஹெல் அல் ஹக் கட்சித் தலைவர் குவைஸ் அல் கஸ்ஸாலி கலந்து கொண்ட தேர்தல் பிரசார கூட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு நடந்தது. இக்கூட்டத்தில் ஒரு கார் குண்டும் அதன் பின்னர் ஒரு மனித வெடி குண்டும் வெடித்தது. இதில் 31 பேர் உடல் சிதறி பலியாகினர். பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

## பொப் பாடகரின் அஞ்சலி நிகழ்வு; நெரிசலில் சிக்கி 23 பேர் பலி

(கின்ஷசா)

ஆபிரிக்காவில் உள்ள கொங்கோ நாட்டின் பிரபல பொப் பாடகர் கிங் கெஸ்டர் மெனியா. இவர் உடல் நலக்குறைவால் கடந்த பெப்ரவரி மாதம் மரணம் அடைந்தார்.

அவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக கின்ஷசா நகரில் கிக்விட் பகுதியில் உள்ள மைதானத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, அங்கு திடீரென மின் தடை ஏற்பட்டது. அதை தொடர்ந்து அங்கு கூடியிருந்த மக்கள் முண்டியடித்து கொண்டு மைதானத்தை விட்டு வெளியேற முயன்றனர்.

இதனால் அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது. பலர் கீழே விழுந்தனர். இச்சம்பவத்தில் 23 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த கொங்கோ அரசு உத்தரவிட்டுள்ளது.

கூட்டத்தில் மின்சாரம் தடைபட்டதற்கான காரணம் குறித்தும் விசாரணை நடத்தப்படுவதாக அரசின் செய்தி தொடர்பாளர் லம்பார்ட் மேண்டே தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் வெற்றோம்
இன்னும் விடியவில்லை.
- மேத்தா

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே! லைற் பில்லோடு சேர்ந்தே வரும் ரெட் பில்லே

பழமொழிகள் பொருள் உணர்த்துவன மட்டுமல்ல; அவை தத்துவக் கருத்துக்களையும் மிக எளிமையாக எடுத்தியம்புவன.

அந்த வகையில் தமிழ் மொழியில் இருக்கக்கூடிய பழமொழிகள் அனைத்தும் அற்புதமானவை. ஏகப்பட்ட பழமொழிகளைக் கொண்ட தமிழ் மொழியில் யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே! என்றொரு பழமொழி உண்டு.

யானை வருகின்றது என்பதை அதன் கழுத்தில் கட்டப்பட்ட மணியோசை வெளிப்படுத்தும்.

ஆக, செவிக் கூர்மையின் மூலமாக எங்கள் கண்ணுக்கு நேரில் தெரியாமல் நடக்கின்ற சம்பவத்தையும் உணர முடியும் என்பது இதன் ஒரு கருத்து.

இது தவிர, யானையின் கழுத்து மணியோசையானது யானை வருகின்ற திசை, அதன் வேகம், அதன் குணம் என்பவற்றையெல்லாம் காட்டி நிற்கும்.

எனவே யானைக்கு முன்னதாக வருகின்ற மணியோசை மிகவும் முக்கியமானதாகும். இந்தப் பழமொழியின் உட்கருத்துப் போல எங்கள் வீடுகளுக்கு மின்சார சபையால் அனுப்பி வைக்கப்படுகின்ற லைற் பில் (மின் கட்டணப் பட்டியல்) இப்போதெல்லாம் தனித்து வருவதில்லை; கூடவே ரெட் பில்லும் (சிவப்புப் பட்டியல்) சேர்ந்தே வருகிறது.

மணியோசை முன்னே வந்தால் யானை வரும் என்பது பொருள்.

ரெட் பில் சேர்ந்தே வந்தால் இருள் வரும் என்பது அர்த்தம்.

அதாவது ரெட் பில் வந்த பின்பும் கட்டணம் செலுத்தாவிட்டால் மின் விநியோகம் துண்டிக்கப்படும்.

ஆக, பதறி அடித்து மின் கட்டணத்தைச் செலுத்துங்கள் என்ற பொருள்பட ரெட் பில்லை லைட் பில்லுடன் சேர்த்தே அனுப்பி வைக்கின்றது மின்சார சபை.

ரெட் பில்லை அனுப்பி வைப்பதால் சில நன்மைகள் பாவனையாளர்களுக்கு இருக்கவே செய்கிறது. அதில் ஒன்று மாதாந்தம் மின்கட்டணத்தைச் செலுத்தும் பழக்கத்தை ஏற்படுத்துதல். மற்றையது மாதாந்தம் மின்கட்டணத்தை செலுத்தும் போது மின்கட்டணத்தின் அளவை நினைவில் வைத்துக் கொண்டு, மின்சாரத்தை வீணடிக்காமல் பார்த்துக் கொள்ளுதல். இதன் மூலம் மின்கட்டணத் தொகையைக் குறைத்தல் என்பன நன்மையே.

அதேநேரம் உச்ச எல்லையாகக் குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்யாமல் மிகக் குறைந்த மின்கட்டணத்திற்கும் ரெட் பில் அனுப்புவது பாவனையாளர்களின் நலனைப் பாதிக்கும் விடயமாகும்.

இதுதவிர; மேலதிகமாக வரியறவிடுதல், ரெட் பில் எச்சரிக்கையுடன் கட்டணம் செலுத்திய பின் மின்சார சபை அலுவலகங்களுக்குச் சென்று அது பற்றிய அறிவித்தலை பாவனையாளரே தெரிவிப்பது என்ற விடயங்கள் அடிக்கடி நிகழும் போது அது மின்சார சபை தனது தனியுரிமைத் தடிப்பை நிலை நாட்டுகிறது என்றே கருத வேண்டி வரும்.

எனவே மொத்தக் கட்டணம் நானூறு ரூபாயாக இருந்தாலும் இரண்டு மாதங்கள் மின் கட்டணம் செலுத்தாவிட்டால் ரெட் பில் அனுப்புதல் என்று நடைமுறையை மாற்றுவது, ரெட் பில் அனுப்பிய பின் கட்டணத்தைச் செலுத்தினால் அது தொடர்பான தகவலை மின் கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களே மின்சார சபையின் அலுவலகங்களுக்கு அறிவிப்பதற்கான வலைப் பின்னல் வசதிகளை ஏற்படுத்துதல் என்பன மின்சார சபையின் தார்மீகக் கடமையாகும்.

## பாக்.மாநிலங்களவை உறுப்பினர்கள் வருகை

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தானின் பஜ்லுஸ்தான் மாநிலங்கள் அவையின் உறுப்பினர்கள் குழுவுக்கு பாராளுமன்றத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

பஜ்லுஸ்தான் மாநிலங்கள் அவையின் சபாநாயகர் மிர்ஜான் முஹமட் கான் ஜமாலி தலைமையில், மாநிலங்களவையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இவர்களை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வரவேற்றதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மேசையில் தட்டி தமது வரவேற்பைத் தெரிவித்தனர்.

இக் குழுவினருக்கு பாராளுமன்றத்தில் சபாநாயகர் விருந்துபசாரமளித்ததுடன் சந்திப்புக்களிலும் இவர்கள் கலந்துகொண்டதுடன் சபை அமர்வுகளைப் பார்வையிட்டிருந்தனர்.

கடந்த 24 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இக்குழுவினர் நேற்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்பின்னர் புராதன நகரங்களுக்கும் இவர்கள் செல்லவுள்ளனர். (2)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி தீ.மஞ்சூரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெறவுள்ளதால் நிலையத்தின் அங்கத்தவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு நிலையச் செயலாளர் கேட்டுள்ளார். (2-29)

## முதலைப் பல்லிகளுடன் மூவர் கைதாகினர்

(கொழும்பு)

12 முதலைப் பல்லிகளுடன் மூன்று பேர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை தாண்யகாமம் சந்தியில் வைத்து நேற்று காலை இவர்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் பயணம் செய்த முச்சக்கர வண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மருதானையில் உள்ள தரகர் ஒருவருக்கு வழங்கும் நோக்கில் சந்தேக நபர்கள் அவற்றை எடுத்துச் சென்றதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அரியவகை உயிரினமான முதலைப் பல்லிகள் இலங்கைக்கே உரிய உயிரினமாகும்.

பெறுமதியான இந்த உயிரினம் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப் படுவதற்காக சட்டவிரோதமாக பிடிக்கப் பட்டு வருகின்றன. (2)

## இலங்கை பிரஜை உயிரிழப்பு

(கொழும்பு)

சார்ஜாவில் உள்ள கட்டடம் ஒன்றின் 24 ஆவது மாடியிலிருந்து விழுந்த இலங்கை பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீதியால் சென்ற நபர் ஒருவர் வழங்கிய தகவலைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த நபர் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

30 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மரண சம்பவம் ஏதும் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டதா என பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### கண்டேன்



சாந்தம் பொறுமையன்பு தாங்கொண்ட வடியார்
மாய்ந்துபோ காவண்ண மருள்தரும் ஒருவனை
காந்தள் முல்லை கானார் மல்லிகை
ஏந்திருக்கும் நல்ல இலங்கையிற் கண்டேன்
பொன்னார் மேனி புரிசடை யண்ணலை
பூதங்க ளைந்தும் பொருந்திநிற் பானை
தென்னா தென்னா வெனவண்டு பாடும்
சீரார் இலங்கை மாநகர் கண்டேன்


## மனக்கலக்கத்திலிருப்போருக்கு மனம்திறந்து ஓர் ஆறுதல் வார்த்தையாவது கூறுவோமா?

### பரமபிதா காட்டிய பாதை

உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்கு காட்சி கொடுத்த நிகழ்வை பைபிள் பகுதி இன்று எமக்கு தருகின்றது. யூதர்களுக்கு அஞ்சிய சீடர்கள்தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, உங்களுக்கு அமைதி உரித்தாகுக! என்று வாழ்த்தினார்.

சீடர்கள் தங்கியிருந்த அறை, இயேசுவோடு அவர்கள் கடைசி இரவு உணவு உண்ட அறையாக இருக்கலாம். அவர்கள் அப்போது இருந்தது மேல்தள அறையாகும். யூதர்களின் கோபம், வெறுப்பு முதலானவை சீடர்களுக்கு நனறாகத்தெரியும். இயேசுவை ஒழித்து விட்டார்கள். இனி எப்படியும், அடுத்த இலக்கு தாங்கள்தான் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்தநேரமும் தலைமைச் சங்ககாவலர்கள் வந்து தங்களை கைது செய்யலாம் என்று நினைத்தனர். எனவே, மேலறையிலிருந்து அவர்களுக்கு கேட்கும் ஒவ்வொரு சத்தமும், அவர்களின் இருதயத்தை கலங்கடித்துக் கொண்டிருந்தன. இவ் அனுபவத்தை நாம் நன்றாக புரிவதற்கு நம்நாட்டு நிலவரமும் மிக நன்றாகவே எமக்கு பாடம் புகட்டிக்கொண்டு இருக்கிறது எனலாம். இப்படிப்பட்ட சூழ் நிலையில் தான் உயிர்த்த இயேசு அவர்களுக்குத் தோன்றுகிறார். உயிர்த்த இயேசு அவர்களுக்கு சொல்லும் செய்தி: உங்களுக்கு அமைதி உண்டாகுக!. கலங்கிப்போயிருந்த சீடர்களின் கலக்கத்தை இயேசு அறியாதவரல்ல. அவர்களின் வேதனையை இயேசு உணராதவரும் அல்ல. அவருக்கு சாவின் பயம் நன்றாகத் தெரியும். ஏனென்றால் சாவை எதிர்நோக்கியிருந்த அவரே, கெத்சமெனி தோட்டத்தில், திகிலும் மனக் கலக்கமும் அடைந்திருந்தார். "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது" என்று அப்போது அவரே சொல்லியிருக்கிறார். எனவே, சீடர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட இயேசு, அவர்களுக்கு அந்த நேரத்தில் எது தேவையோ, அதை அறிந்தே வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறார். கலங்கிப்போயிருக்கிற சீடர்களுக்கு அப்போதைய தேவை அமைதி. இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட சீடர்களின் பயஉணர்வுகள் அகன்று போனது. அவர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். உயிர்த்த இயேசு கலங்கிப் போயிருந்த சீடர்களுக்கு கலக்கத்தைப் போக்கி மகிழ்ச்சியைத் தருகிறார்.

இன்று தோமா இயேசுவைக் கண்டு அவரில் நம்பிக்கை கொண்ட நிகழ்ச்சியையும் நாம் பார்க்கிறோம். இயேசு தம் சீடர்களுக்கு தோன்றியபோது தோமா அங்கே அவர்களோடு இல்லை. தோமாவிடம் மற்ற சீடர்கள் தாங்கள் இயேசுவைக் கண்டதாகக் கூறிய பிறகும் அவர் நம்ப மறுக்கிறார். தாமாகவே நேரடியாக இயேசுவைக் கண்டால்தான் நம்ப முடியும் என அவர் உறுதியாகக் கூறிவிடுகிறார். எட்டு நாட்களுக்குப் பிறகு இயேசு மீண்டும் ஒருமுறை சீடர்களுக்குத் தோன்றியபோது தோமாவும் கூட இருக்கிறார். இயேசு தோமாவை அழைக்கிறார். தம் அருகே வந்து தம்மைத் தொட்டுப்பார்க்கச் சொல்கிறார். ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்ளக் கேட்கிறார். இயேசுவை அணுகிச் சென்று, அவரைத் தொட்டுப் பார்க்கும் துணிச்சல் தோமாவுக்கு வரவில்லை. கலககம் அடைகிறார். ஆயினும் இயேசுவின் குரலைக்கேட்டதுமே அவருடைய உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. தம் தலைவரும்போதகருமான இயேசுவே தம் முன்னால் நிற்கிறார்என்னும்எண்ணம்தோமாவின் இதயத்தை நிரப்பிவிட தோமா இயேசுவைத் தம் "ஆண்டவர்" எனறும "கடவுள்" என்றும் அறிக்கையிட்டு ஏற்றுககொணடார் அவரது கலக்கம் நீங்கியது.



நாமும் நம்பிக்கையில் உறுதி பெற வேண்டும் என்பதை அவர் விரும்புகிறார். உயிர்த்த ஆண்டவரில் நாம் நம்பக்கையை வைப்போம் என்று மற்றவர்களுக்கு ஆறுதல் வார்த்தையாவது கூறுவோம்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்து; கரவெட்டி பிரதேச செயலகம் சம்பியன்







யாழ் மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக்கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

யாழ் மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக்கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான போட்டிகளின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பும் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது.

ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல் பெறுவதற்காக கடுமையாகப் போராடி எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தது.

இரு அணிகளுக்கும் சந்தர்ப்பங்கள் மாறி மாறி கிடைத்த போதும் கோல் பெற முடியவில்லை. இதனால் முதல் பாதியாட்டம் கோலெதுவும் பெறாத நிலையில் நிறைவுபெற்றது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பமாகிய போது கோல் பெறுவதற்காக இரு அணிகளும் கடுமையாகப் போராடினர். எனினும் கோல் பெறும் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை.

போட்டி நிறைவடைவதற்கு சிறிது நேரம் இருக்கையில் கிடைத்த சந்தர்ப்பத்தை கரவெட்டி பிரதேச செயலக அணி கோலொன்றினைப் போட்டது.

பதிலுக்கு கோல் போட தெல்லிப்பழை பிரதேச செயலக அணி முயன்ற போதும் போட்டி நேரம் நிறைவடைந்தமையால் போட்டியில் 1:0 என்றும் கோல் கணக்கில் கரவெட்டி பிரதேச செயலக அணி வென்று சம்பியனாகியது. (க-23)

## எஸ்.தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தப்படும் அணிக்கு 6 பேர் கொண்ட (5 ஓவர்கள்) கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

முதற் சுற்றுப் போட்டிகள் சென்.ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானங்களில் நேற்றுமுன்தினம் நடைபெற்றதுடன் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி நேற்று சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சுற்றுப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சம்பியனாகியிருந்தது.


தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற போட்டிகளில் கொக்குவில் இந்து கல்லூரி அணியும் சம்பியன் பட்டத்தை தமதாக்கி கொண்டிருந்தன.

இம்முறை சுற்றுப்போட்டியில் 12 பாடசாலை அணிகள் பங்குபற்றுவதுடன் முதற் சுற்றுப் போட்டிகள் லீக் முறையில் நடைபெற்று 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

தொடர்ந்து நேற்று அரையிறுதி மற்றும் இறுதி போட்டிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட 56 இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இளைஞர் சேவை மன்றத்தினரால் நடத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான பெருவிளையாட்டுக்கள் மற்றும் தனி விளையாட்டுக்களில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டி வெற்றிகளை தமதாக்கிக் கொண்ட மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்ல விளையாட்டுக் கழகம் 156 புள்ளிகளைப்பெற்று ஏனைய கழகங்களைவிட முன்னிலை பெற்று 2014 ஆம் ஆண்டுக்கான வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கி இவ் ஆண்டின் சிறந்த கழகமாகியது.














## வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்; சிறி காமாட்சி வி.கழகம் காலிறுதிக்கு தெரிவு

வீ.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 9 ஆண்டாக நடத்தி வரும் 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 7 ஆவது கால் இறுதி முன் போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் சிறிகாமாட்சி அணி, ஜொலிஸ்ரார் அணியை 51 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 47 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 262 ஓட்டங்களை பெற்றனர்.

கார்த்திக்-32, சுதர்ஸன்-17, பவின்தன்-37, டர்சன்-83 ஓட்டங்களைப் பெற்றனர். சஜீவன்-02, பார்த்தீபன்-03, சஜீகன்-01, சைலேஸ்-01, உமா-01, பிரசன்னா-01 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 40.3 ஓவர்களில் சகல இலக்குகளை யும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றனர்.




துடுப்பாட்டத்தில் சஜீகன்-82, மணி 16, சைலேஸ்-19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுதர்ஸன்-03, கேதீஸ்-02, பிரசன்னா, பவீந்திரன் தலா 01 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இதில் வெற்றி பெற்ற சிறிகாமாட்சி அணி, ஸ்கந்தாஸ்ரார் அணியுடன் 3 ஆவது கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள். இப் போட்டியின் மூலம் சிறந்த கழக அணித் தெரிவுக்கு சிறிகாமாட்சி அணி 9.13 புள்ளிகளையும், [illegible] களையும் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஸ் மோதி...

போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த குறித்த வயோதிபர் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பேருந்து மோதித்தள்ளியுள்ளது.

வயோதிபரை மோதித்தள்ளிய குறித்த பேருந்து மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த போதே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

மேற்படி பேருந்து பயணிக்க வேண்டிய வீதியின் பகுதியைவிட்டு விலகிப்பயணித்ததே விபத்துக்கு காரணம் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை மேற்படி விபத்தில் படுகாயமடைந்த குறித்த முதியவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டுள்ளார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவே அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ- 6)


# கண்ணீர் அஞ்சலி



## அமரர் கந்தையா மாணிக்கலிங்கம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் முன்னாள் திருவிழாச் சபைத் தலைவரும், தேர்த்திருப்பணிச் சபையின் செயலாளரும், ஆலயத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவருமாகிய **கந்தையா மாணிக்கலிங்கம** (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தி அடைய திருவெண்காட்டுப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் தேவஸ்தானம், மண்டைதீவு.*

(சி-7197)


# தனித் தமிழீ...

அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா இந்தியாவின் அடுத்த பிரதமராக தெரிவானால், தனித் தமிழ் ஈழத்திற்கான ஒரு வலுவான நபராக இருப்பார் எனவும் அவர்கள் எண்ணுகின்றனர்.

இதனால் புலம்பெயர் குழுக்கள் தேர்தலில் அதிமுக வெற்றி பெறும் என்று பந்தயம் கட்டி வருகின்றனர்.

அதேவேளை மதிமுக தலைவரும் புலிகளின் முக்கிய ஆதரவாளரும் புலம்பெயர் தமிழர்களின் அன்புக்கு பாத்திரமான வைகோவால் கூட அவர்கள் மத்தியில் இவ்வாறான ஆதரவை பெற முடியவில்லை.

மத்தியில் ஜெயலலிதா தலைமையில் ஆட்சி அமைந்தால், ஈழ தமிழர்களுக்கான தனது ஆதரவு நிலையில் வேகம் காட்டுவார் எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

இதனால் தமிழர்கள் பெருமளவில் அதிமுகவிற்கு ஆதரவு வழங்கி ஜெயலலிதாவின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என இலங்கை தமிழர்களின் அமெரிக்காவை தளமாக கொண்ட ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-11)

# தென்னாபிரி...

கொள்வதற்காக வந்திருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதியிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனடிப்படையிலேயே இலங்கை இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தென்னாபிரிக்கா தலையிட்டது. இதன் தொடர்பில் பேசுவதற்காக அரசாங்கத்தின் பிரதிநிதிகளும், கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் தென்னாபிரிக்கா சென்றிருந்தனர்.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரங்களைக் கையாள்வதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதியால் சிறப்புப் பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். அவரும் எதிர்வரும் மாதங்களில் இலங்கை வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே இறுதியான அரசியல் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை, தென்னாபிரிக்காவின் நல்லிணக்க முயற்சிகளைக் குழப்பும் ஒரு செய்ற்பாடாகும்.

வெள்ளை இனத்தவர்களை கடந்த காலங்களில் வெள்ளைப்புலி எனத் தெரிவித்து வந்த அரசாங்கம், இனிவரும் காலங்களில் கறுப்பு இனத்தவர்களையும் கறுப்புப் புலிகளாக அழைக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# அகதிகளை ...

ரேலிய மற்றும் இலங்கை கூட்டுக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழு கலந்து கொண்டிருந்தது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிசன், முன்னைய அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைந்தவர்களையும் திருப்பி அனுப்புவதில் தமது அரசாங்கம் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளார.

அத்துடன், வேறு நாடுகள் ஊடாக தமது நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைந்தவர்களை எந்த நிலையிலும் அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ளாது என்று தனதுரையில் குறிப்பிட்டுள்ள ஸ்கொட் மொறிசன், அவர்களைத் திருப்பி அனுப்புவதில் தமது அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பியுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, அவுஸதிரேலியாவின் எல்லைகளைப் பாதுகாப்பதற்காக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்த நடவடிக்கையால், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் வலுப்படுததப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு முதற்தடவையாக விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அந்நாட்டின் உயர்மட்ட அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (எ-11)


# சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான

## தேர்த்திருவிழா சிறப்பு மலர்

## 27.04.2014



பிரதம குரு
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்.

கதிரமலை நாதன் தேர் உலாக்காட்சி
அனைவருக்கும் நல்லருள் தரட்டும்



மஹோற்சவ குரு
சோமஉமாரமணக் குருக்கள்



மு.செல்வஸ்தான்
அதிபர், இந்துக் கல்லூரி இணுவில்.



வரலாற்றுச் சிறப்புடைய கதிரமலை ராஜ்ஜியத்தின் (மகாராஜ விக்கிரமசிங்கவினால்) ஆராதிக்கப்பட்ட ஸ்ரீ கதிரமலை நாதன் பொன்னம்பலவாணர் அன்னை சுவர்னாம்பிகை சோமாஸ்கந்தர் விநாயகர் முருகன் சகிதம் முத்தேர் பவனி வருவதால் அனைத்து மக்களும் நாடும் சகல சுபீட்ஷமும் பெற்று சிறப்புற எம் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

எமது குல தெய்வமாகவும், தொன்மையும் அருள் கீர்த்தியும் நிறைந்து எமது கிராமத்தின் சிகரமாக விளங்கும் கதிரமலையுருவ சிவன் இன்று தேர் உலா வருவது எல்லோர்க்கும் அருள்தரும் நிகழ்வாகும். இவ்வாலயம் 5 குண்ட மகாயாகத்துடன் 13 தினங்கள் நடைபெறும் சிறப்புடையது. எல்லோரும் வந்து தரிசித்து வடம் பிடித்து உய்வோமாக.

சுபம்

மலரமைப்பு:
S.ஞானேஸ்வரன்
அலியான்ஸ் இன்சுரன்ஸ்

கதிரமலை சிவன் தேவஸ்தானத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலைவாய்ப்பு

Direct Marketing International (Pvt) Ltd புதிய 3 கிளைகளை ஆரம்பிக்க உள்ளது. (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு) ஆகிய பிரதேசங்களில் உள்ள 10, O/L, A/L கற்ற அனைவருக்கும் தகைமைகளின் அடிப்படையில் வேலை வழங்கப்படும். முதலில் 4-6 மாத கால இலவச பயிற்சி வழங்கப்படும்.

* தங்குமிட வசதி உண்டு.
* பயிற்சிக் காலத்தில் 10,000/- 15,000/- மேல்
* பயிற்சியின் பின் 30,000/- மேல்
* EPF, ETF உண்டு.
* வயது 18-40க்கு உட்பட்டோர்.
* முன்னனுபவம் அவசியமற்றது.

தொடர்புகளுக்கு:
0778920777
0770056677
www.innovage.net

(C-7179)



# BRITISH COLLEGE OF ENGLISH

IELTS BRITISH COUNCIL

IELTS Registration Centre For British Council

July- 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்.



**Unique Features**

* Class Work with individual attention
* Guaranteed results to achieve high band scores
* Free access to English Language Centre
* Free use of latest IELTS Materials
* Course Conducted by University Lecturers who have undergone IELTS Teacher preparation Courses at the British Council

**Course duration Commencement**

| | |
|---|---|
| Saturday - Sunday | 8.30 a.m - 11.30 a.m |
| Mou - Tues - | 7.00a.m 8.30 a.m |
| Wed - Thurs | 3.00 p.m 5.00 p.m |

10 Weeks
03.05.2014

வகுப்புக்கள் - 03.05.2014 ஆரம்பம் (C-6986)

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவுக்குச் சமீபமாக) Tel: 0778803887



# Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

ஆசிரியர்:KRC TP:0779672038


## நெடியவனின்...

யிட்டுள்ள இலங்கை பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன.

நெடியவன் தொடர்பான விபரங் கள் இன்டர்போலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. தற்போது அவர்கள் அதற்கான முனைப்புகளை மேற்கொள்ள முடியும் எனக் கூறியுள்ளார்.

இன்டர்போல் தனது இணையத்தளத்தில் நெடியவனுக்கு எதிரான சிகப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளதுடன் இலங்கையில் பயங்கரவாதம் தொடர்பில் தேடப்படும் நபர் எனக் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

## பாடசாலைகளுக்...

அந்தச் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், யுத்தம் முடிவடைந்த பின்னர், யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் அமைதி நிலவுகின்ற நேரத்தில் இவ்வாறு பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை அச்சமடையச் செய்யும் வகையில் படையினர் நடந்து கொண்டிருப்பதாகக் கூறினார்.

பாடசாலை நேரத் தில் நடைபெற்ற இந்த சம்பவங்கள் காரணமாக பாடசாலைச் சூழலில் பதற்ற நிலைமை உருவாகியிருப்பதாகவும் இதனால் அங்கு கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ-11)


# இலவச விசா ஆலோசனைகள்

* ஐக்கிய அமெரிக்கா
* கனடா
* அவுஸ்ரேலியா
* நியூஸ்லாந்து
* ஐரோப்பிய நாடுகள் (UK, France, Italy, Swiss, Germany, Poland, Latvia)
* ஆசிய நாடுகள் (Singapore, Malaysia, India, China, Russia)

Family Visa
Student Visa
Work Permits

# Entry with G.C.E O/L # IELTS Not required
# Free Accommodation # Very low Course fee
# Financial Sponsorships # Full Scholarships

(C-7188)

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் .......

ICS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
107-B 1/1,Galle Road, Colombo - 06
021 4926222 , 077 3013060



# ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்குண்டு.



தரமான ஓடுகள், செங்கற்கள் யாழ்,வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு-077-3818799 (C-7181)

பிரணவன் என்ரபிறைசஸ்
இல:635, பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.



# Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-7180)

Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393



# உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனமான Dialog விபத்து காப்புறுதியுடன் இணைந்து வேலை செய்ய அரியவாய்ப்பு.

ஆரம்பச் சம்பளம் 7,500/- உடன் 35,000/- மேல் Commission வழங்கப்படும்.

மேலதிக தகைமைகள் :
சாதாரண தரத்தில் / உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள்.
18-45 வயதிற்குட்பட்டவர்கள்.
ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
காப்புறுதிக்கான முன் அனுபவம் உள்ளவர்களும் ஏனையவர்களும் விண்ணப்பிக்கலாம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, கிளிநொச்சி மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு :
0773166610 / 0772306768
(Rajeeban) யாழ்ப்பாணம்.

தமது சுயவிபரக்கோவையை (CV) ஐ அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
c.rohan@milvik.se

(C-7179)



# மரண அறிவித்தல்

## செல்லத்துரை கந்தசாமி

(முன்னாள் நடத்துனர் இ.போ.ச)



யாழ் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், பளை முல்லையடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கந்தசாமி 24.04.2014 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரரும் காலஞ்சென்றவர்களான சுப்பர் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் (பவளம்) பாசமிகு கணவரும் பவானி (பளை), சுதாகரன் (பளை), இளந்திரையன் (பளை), அகிலன் (கனடா) நளினி (லண்டன்), நந்தகுமார் (சுவிஸ்), பகீரதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தினி (பளை) சுதாயினி (பளை), கஜேந்திரன் (லண்டன்), பாமதி (சுவிஸ்), தேனுகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மிலி, கஸ்மீரா, தாரோஜிதன், பிரவிஸன், சங்கவி, பிரதீஸ், சஞ்ஞனா, ஹிந்தியா, விதுனன், சஜனி, கிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நாளை 28.04.2014 திங்கட்கிழமை பளையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப. 10.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக மலையான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்

280 வது கி.மீ. கட்டை
A9 வீதி, வண்ணாங்கேணி, பளை.

குடும்பத்தினர்
021 2050006

(6237)



யாழில் முதல் தடவையாக

Student Visa/Work Permit/
சிகரம் தொழில் வங்கி மூலம் வேலைவாய்ப்புடனான தொழில்சார் கற்கைகள்

IQN International Qualifications Network
UK Diploma In Hospitality & Tourism Management

தொழில் தகைமை விருத்தி, தொழில் அங்கீகாரம் - தொழில்வாய்ப்பு உத்தரவாதமான

aat SRI LANKA
தொழில் தேடுவோரும், க.பொ.த. (சா / த) முடித்து உயர்தரம் முதலாமாண்டில் இருப்பவர்களும் கற்கலாம்

2001, 2002, 2003இல் aat கற்றவர்களே க.பொ.த.(உ / த) வர்த்தகப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிட்மும், சிறப்புத் தேர்ச்சிகளும் பெற்றனர். ஒரு வருட Exemption உடன் CIMA/Chartered செய்யலாம்.

கற்கைநெறி நிறைவில்....

UK / Australia / New Zealand / Canada Switzerland /Malaysia / Dubai Student Visa / Work Permit

சிகரம் தொழில் வங்கி மூலம் யாழ், கொழும்பு முன்னணி Hotel களில் வேலைவாய்ப்பு

FREE OFFER
ENGLISH THE EASYWAY ஆங்கிலக் கற்கை & Job Skills Development Training

Sikaram Get Set
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
0777 324 004, 021 222 00 11
www.sikaram.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org